உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-புரட்டாசி. மலர்: சு.

உ

ஒலோகமாதேவீச்வரக் கல்வெட்டு.

ஒலோக மாதேவீச்வரம் என்பது, திருவையாற்றில், அறம் வளர்த்த அம்மையொடு ஐயாறுடைய அடிகள் இனிது வீற்றிருக்கும் திருக்கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகைக்கண் உள்ளதொரு சிறு கற்கோயிலாகும். இதனை எடுப்பித்தவர் ஒலோகமாதேவி என்பவர். அவர், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 985 முதல் 1013 வரையில் செங்கோலோச்சியிருந்த முதல் இராசராச தேவரது முதற்பெருந்தேவியாவார். அவ்வம்மையால் எடுக்கப்பெற்றமையின் ஒலோகமாதேவீச்வரம் என வழங்கும் இவ்வாலய விமானத்தின்வடபுறக் குமுதப்படையில் தொடங்குற்று மேற்புறத்தும் தென்புறத்துமாகத் தொடர்ந்து செல்வது இக் கல்வெட்டுச் சாசனம். இதனை ஆராயின், அற்றைநாளையில் இத் தண்டமிழ் நாட்டில் தனிவடம், திரிசரம், பஞ்சசரி, முகத்தில் மாணிக்கம் கட்டின திருச்சன்னவடம், தாலிகள் கோத்தமாலை, முத்தின்பட்டிகை, முத்தின் வளையில், இடுக்குவளையில், பொன்னின் காற்காறை, முத்தின் காற்காறை முடி, குதம்பை, தாழ்க் கூட்டுக்கம்பி ஓலை, முத்தினுழுத்தோர்லை, நீலத்தினுழுத்தோரலை, பட்டம், சுட்டி, ஸ்ரீசந்தம் என்றின்னோரன்ன மணிகள் அழுத்திய அணிகலங்களும், பொன்னின் தளிகை, ஒட்டுவட்டில், மானவட்டில், வெள்ளித்

தளிகை, வெள்ளிக்கலசம், வெள்ளிக்கச்சோலம், வெள்ளிச் சட்டுவம், வெண்கல இலைத்தட்டு முதலாய பரிகலங்களும், மத்தளம் கொட்டும்பாவை உடுக்கை வாசிக்கும் பாவை பாடும் பாவை ஆடும்பாவையும் அமைத்த பாவைக்கன்னடியும், பள்ளித்தொங்கல் மகுடம், ஈச்சோப்பிக்கை தூங்குவிளக்கு, ஈழச் செயல் விளக்கு, மலையாண் செயல் விளக்கு, சோழியச் செயல் விளக்கு, அனந்தலை விளக்கு, ஆரக்குட விளக்கு, தூபமணி, கைமணி, எறிமணி உள்ளிட்ட பிறவும் இருந்தமை நன்குணரலாம்.

L. உலகநாத பிள்ளை.

உ

ஒலோகமாதேவிச்சுவரம் கல்வெட்டு.

ஸ ஸி ஸ்ரீ: திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
வ த தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள் ளெல்லா யாண்டும்
தொழுதெழ விளங்கும் யாண்டே செழியரைத்-
தேசுகொள்

ஸ்ரீகோவிராஜராஜகேஸரிபன்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்குயாண்டு உ௰௯ ஆவது உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியான ஸ்ரீ ஒலோகமாதேவியார் வடகரை ராஜேந்திர ஸிம்ஹவள நாட்டுப் பொய்கைநாட்டு திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவி ஈச்வரம் உடைய மகாதேவர்க்கும் ஒலோகவிடங்கதேவருள்ளிட்ட திருமேனிகளுக்கும் செய்வித்த பொற்கோளகை முதலாய் உள்ள

திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும் கல்லிலே வெட்டுவிக்கவென்று உடன் கூட்டத்து அதிகாரம் செய்கின்ற கோவலூருடையான் காடன் நூற்றெண்மனையும் அதிகாரிச்சி எருதன் குஞ்சரமல்லியையும் அருளிச்செய்ய கல்லில் வெட்டினபடி: **கோளகை** தேவர் வளையிலிரண்டுள்பட **குடிஞைக்கல்லால்** பொன்நிறை மூவாயிரத்திருநூற்றெழுபத்து முக்கழஞ்சும் **பட்டம்** மூன்றினால் பொன்நிறை எண்பத்தொன்பதின் கழஞ்சேய் காலும் பொன்னின் **தாமரைப் போற்பூ** ஒன்றினால் நிறை பதின்கழஞ்சும் ஒலோகவிடங்கதேவர் சாத்தியருளும் **முடி** ஒன்று பொன்நிறை நூற்றைங்கழஞ்சரையும் மேற்படியில் கட்டின மாணிக்கம் இருபத்தொன்றும் வயிரம் நூற்றிரண்டும் நீலமொன்றும் தருப்பறுபத்துநாலும் பொத்தி யெழுபத்தொன்பதும் ஸப்ரயோகம் இருநூற்றுநாற்பதும் மேற்படியில் கட்டின தகட்டுப்பொன் முக்கழஞ்சும் மேற்படியில் கோத்தமுத்து ஐஞ்ஞூற்று எழுபத்துமூன்றும் மேற்படியில்கோத்த வெள்ளி கழஞ்சும் மேற்படியார் சாத்தும் **குதம்பைய்** ஒன்று பொன் இருகழஞ்சும் மேற்படியில் கட்டின மாணிக்கமொன்றும் தருப்பிருபத்து மூன்றும் ஸப்ரயோகம் பதினேழும் முத்து இருபத்தேழும் மேற்படியார் சாத்தும் **தாழ்க்கூட்டுக் கம்பி** ஓரணையினால் தூண்ட மிரண்டும் ஆணி இரண்டும் உட்பட பொன் முக்கழஞ்சரையே நாலு மஞ்சாடியு மிரண்டுமா மேற்படியார் சாத்தும் **மாலை** ஒன்று தாலி இருபத்தேழும் கடைப்பலகை இரண்டும் பொன் இருபத்தெண் கழஞ்சேகாலும் மேற்படியில் கட்டின ஸப்ரயோகம் ஐம்பத்தேழும் தருப்பு நானூற்றிருபத்தொன்றும் பொத்தி இருபத்தேழும் மேற்படியில் கட்டின தகட்டுப்பொன் கழஞ்சேமுக்காலே மஞ்சாடியும் மேற்படியிற் கோத்த முத்து எழுபதும் மேற்படியார் சாத்தும் **தனிவடம்** ஒன்று முத்து நாற்பத்திரண்டும் மேற்படியார் சாத்தும் **திரிசரம்** ஒன்றினால் முத்து நூற்றெட்டும் மூன்றொன்றாக அடுக்கி விளக்கின தாலிம்பம் இரண்டும் படுகண் ஒன்றும் கொக்குவா யொன்றும் ஆக பொன்கழஞ்சரையே நாலுமஞ்சாடியு மிரண்டுமாவும் மேற்படியார் சாத்தும் **பஞ்சசரி** யொன்று முத்து இருநூற்றிருபத்துநாலும் பொன்னின் இடைக்கட் டிரண்டும் அஞ்சொன்றாக

அடுத்து விளக்கின தாளிம்ப மிரண்டும் படுகண் ஒன்றும் கொக்
குவா பொன்றும் பொன் முக்கழஞ்சரையே நாலுமஞ்சாடியும்
மேற்படிப்பார் சாத்தும் **ஸ்ரீசந்த**மொன்றினல் முகமொன்றும்
இடைக்கட்டு நாலும் தவளைவாய் நாவியில் சவுக்கம் ஒன்றும்
பொன் இருகழஞ்சே ஆறுமஞ்சாடியும் ஆறுமாவும் மேற்படி
முகத்தில் கட்டின நாயகமாணிக்கம் ஒன்று நிறை அரைக்கழஞ்
சேய்நாலுமஞ்சாடியும் அறுமாவும் ஸப்ரயோகம் இருபத்தேழும்
இதிற்கோத்த **திருச்சன்னவடம்** மூன்றினல் முத்து ஆயிரத்
திருநூற்றெழுபத்தெட்டும் மேற்படியார் சாத்தும் **முத்தின்
வளையில்** ஒன்று பொன் பதின்கழஞ்சரையே அரைக்காலும்
மேற்படியில் தச்சமுத்து நூற்றெண்பத்தெட்டும் மேற்படியார்
சாத்தும் மேற்படி ஒன்று பொன் எண்கழஞ்சரையே மூன்று
மாவும் மேற்படியில் தச்சமுத்து நூற்றொருபத்தொன்பதும்
மேற்படியார் சாத்தும் மேற்படி யொன்று பொன் பதின்கழஞ்
சேய் மூன்றுமஞ்சாடியும் அறுமாவும் மேற்படியிற் றச்சமுத்து
நூற்றெண்பத்தொன்றும் மேற்படியார் சாத்தும் மேற்படி
யொன்று பொன் பதின்கழஞ்சே மஞ்சாடியும் இரண்டுமாவும்
மேற்படியிற் றச்சமுத்து நூற்றுத்தொண்ணூற்றுறும் மேற்படி
யார் சாத்தும் **முத்தின் பட்டிகை** ஒன்றினல் பொன்னின் பூ
ஆறும் முகம் ஒன்றும் பொன் இருகழஞ்சரையே நாலுமஞ்சாடி
யும் மேற்படியில் சளியிலும் தூக்கத்திலும் தச்ச பொத்தி பத்
தொன்பதும் ஸப்ரயோகம் முப்பத்தொன்றும் முகத்தில் தச்ச
பருமுத்தஞ்சு உள்பட முத்தாயிரத்து முந்நூற்று முப்பத்தஞ்சும்
மேற்படியார் சாத்தும் **பொன்னின் காற்காறை** ஒன்றினல்
பொன் பத்தொன்பதின் கழஞ்சேமுக்காலே மூன்றுமஞ்சாடியு
மறுமாவும் **ஒலோகவிடங்கதேவர் நம்பிராட்டியார்** சாத்தியரு
ளும் **முடி** பொன்று நிறை நாற்பத்தெண்கழஞ்சே ஒன்பது மஞ்
சாடியுக்.........ம் மேற்படியில் கட்டின மாணிக்கம் ஒன்றும்
ஸப்ரயோகம் எண்பத்தாறும் கருப்புஇருநூற்று நாற்பத்தொன்
பதும் பொத்தி பதினுலும் மேற்படியில் கட்டின தகட்டுப்பொன்
கழஞ்சரையே குன்றியும் மேற்படியிற் கோத்தமுத்து எழுநூற்
றுத் தொண்ணூற்றொருபதும் மேற்படியிற் கோத்த வெள்ளி
கழஞ்சரையே மூன்றுமஞ்சாடியும் மேற்படியார் சாத்தும் **குதம்**

ணை ஒன்று பொன் கழஞ்சே மஞ்சாடியு மஞ்சுமாவும் மேற்படி யிற் கட்டின மாணிக்க மொன்றும் தருப்பொன்பதும் ஸப்ரயோ கம் ஒன்பதும் பொத்திநாலும் முத்திருபத்தொன்றும் மேற்படி யார் சாத்தியருளும். மேற்படி பொன்று பொன்கழஞ்சே மஞ் சாடியும் அஞ்சுமாவும்மேற்படியிற் கட்டின மாணிக்கமொன்றும் தருப் பொருபதும் ஸப்ரயோகம் ஒன்பதும் பொத்தி நாலும் முத்திருபத்தொன்றும் மேற்படியார் சாத்தியருளும் **கம்பி ஒரணையினால்** தண்டமிரண்டும் ஆணியிரண்டு முட்பட பொன் இருகழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியும் மேற்படியார் சாத்தும் **நீலத்தினுழத் தோரணையினால்** பொன் கழஞ்சரை யும் மேற்படியில் நீல மிரண்டும் ஸப்ரயோக மஞ்சும் தருப்பு பத்தும் மேற்படியார் சாத்திம் **முத்தின் னுழத்தோரணை யினால்** பொன்கழஞ்சரையே. குன்றியும் முத்திரண்டும் ஸப்ர யோகம் ஏழும் தருப்பு மூன்றும் பொத்தி மூன்றும் மேற் படியார் சாத்தும் **திரு** ஒன்றும் மேற்படியில் கோத்த நாண் ஒன்றும் படுகண் ணிரண்டும் கள்ளிப்பூ ஒன்றும் கொக்குவா யொன்றும் பொன் இருகழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியு மறுமாவும் மேற்படியார் சாத்தும் **மாலை** தாலி இருபத் தொன்றும் தாளிம்பம் இரண்டும் உள்பட பொன் பதினெண் கழஞ்சேகாலும் மேற்படியிற் கட்டின ஸப்ரயோகம் அறுபத் தெட்டும் தருப்பு எண்பதும் பொத்தி இருபத்திரண்டும் மேற் படியிற் கட்டின தகட்டுப்பொன் முக்காலே இரண்டு மஞ்சாடியும் மூன்றுமாவும் மேற்படியிற் கோத்தமுத்து ஐம்பத்தேழும் மேற் படியார் சாத்தும் **திரிசரம்** ஒன்றுமுத்து எண்பத்தாறும் மூன் றொன்றாக அடுக்கி விளக்கின பொன்னின் தாளிம்பமிரண்டும் படு கண் இரண்டும் கொக்குவாயொன்றும் பொன்கழஞ்சரையும் மேற் படியார் சாத்தும் **பஞ்சசரி** யொன்றும் முத்து நாற்றெண்பத் தெட்டும் மேற்படியிற் பொன்னின் இடைக்கட் டிரண்டும் அஞ் சொன்றாக அடுக்கி விளக்கின தாளிம்ப மிரண்டும் படுக ணொன் றும் கொக்குவாயொன்றும் பொன் முக்கழஞ்சரையே அஞ்சு மாவும் மேற்படியார் சாத்தும் **ஸ்ரீசந்தம்** ஒன்றினால் முகமொன் றும் இடைக்கட்டு நாலும் தவளைவாய் நாஸியில் சவுக்கம் ஒன் றும் பொன் கழஞ்சரையும் மேற்படியில் முகத்திற் கட்டின

மாணிக்கம் ஒன்றும் தருப்பு பதினாறும் ஸப்ரயோர்கம் நாலும் பொத்தி நாலும் மேற்படியிற் கோத்த திருச்சன்னவடம் மூன்றினால் முத்து எழுநூற்றைம்பத்திரண்டும் மேற்படியார் சாத்தும் **முத்தின் வளையில்** ஒன்றும் பொன் ஒன்பதின் கழஞ்சேப் முக்காலே அரைக்காலும் மேற்படியில் தச்சமுத் திருநூற்றேழும் மேற்படியார் சாத்தும் மேற்படி பொன் எண்கழஞ்சேகாலும் மேற்படியில் தச்ச முத்து நூற்றிருபத்தாறும் மேற்படியார் சாத்தும் **முத்தின் பட்டிகைய்** ஒன்றினால் பொன்னின்பூவினால் பொன் கழஞ்சே முக்காலேமஞ்சாடியும் மேற்படியில் சனியிலும் தூக்கத்திலும் பூவிலும் தச்ச பொத்தி பதினொன்றும் ஸப்ரயோகம் பதினெட்டும் முத்து ஆயிரத்திருநூற்றறுபத்தேழும் மேற்படியார் சாத்தியருளும் **முத்தின் காற்காறைய்** ஒன்றினால் பொன் எழுகழஞ்சும் மேற்படியிற் றச்சமுத்து தொண்ணூற்றொன்றும் **பிள்ளையார் சுப்பிரமணியதேவர்** சாத்தும் பொன்னின் **முடி** ஒன்று பொன் முக்கழஞ்சரையே அரைக்காலும் மேற்படியார் சாத்தும் **சுட்டி** பொன்று பொன் ஒன்பது மஞ்சாடியும் மூன்றுமாவும் மேற்படியில் கோத்தமுத்தொன்றும் மேற்படியார் சாத்தும் **சூல** மொன்றும் பொன் அரைக்கழஞ்சும் மேற்படியார் சாத்தும் **இடுக்குவளையில்** இரண்டு பொன் மூக்கழஞ்சும் **பொற்பூ** ஐம்பத்தொன்றினால் பொன் ஐம்பதின் கழஞ்சும் **பொற்பூ** நூறினால் பொன் நாற்பத்தொன்பதின் கழஞ்சரையே நாலு மஞ்சாடியு மிரண்டுமாவும் **பொற்பூ** வொன்று பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் **பொற்பூ** வொன்று பொன் காலும் **பொற்பூ** பதினெட்டினால் பொன் பதினெண் கழஞ்சே மஞ்சாடியும் பொன்னின் **தளிகை** யொன்றினால் அலகுநிலைப்படி பொன் நானூற்று நாற்பத்தெண்கழஞ்சரையும் **ஒட்டுவட்டில்** ஒன்று அலகுநிலைப்படி பொன் இருநூறுகழஞ்சும் பொன்னின் **மடல்**ஒன்று அலகுநிலைப்படி பொன் ஐம்பதின் கழஞ்சும் **மாணவட்டில்** ஒன்று நிறை பொன் பதினாற்கழஞ்சரையே அரைக்காலும் **சாமரைக்கைய்** ஒன்று பொன் அலகுநிலைப்படி பொன் முப்பதின்கழஞ்சும் மேற்படி ஒன்று அலகுநிலைப்படி பொன் முப்பதின் கழஞ்சும் **ஈச்சோப்பிக்கைய்** ஒன்று பொன் முப்பதின்கழஞ்சும் **ஈச்சோப்பிக்கைய்** ஒன்று

பொன் முப்பதின்கழஞ்சும் **பள்ளித்தோங்கல் மகுடம்** நாலினால் செம்பின்மேலும் பனத்தில மேலும் சுருக்கின பொன் அலகு நிலைப்படி பொன் நூற்றுஒருபத்து ஒன்பதின் கழஞ்சேகாலும் **வெள்ளித்தளிகை** ஒன்றினிறை அலகுநிலைப்படி நூற்றறுபத்தொரு கழஞ்சும் **வெள்ளிமண்டை** பொன்று அலகுநிலைப்படி நூற்றுத்தொண்ணூற்றைங் கழஞ்சும் மேற்படி **வெள்ளிக்கலச**மொன்று அலகுநிலைப்படிக் கழஞ்சும் **வெள்ளிச் சட்டுவ**மொன்று மேற்படி நிறை தொண்ணூற்று எண்கழஞ்சரைய் **வெள்ளிக்கைச்சோலம்** ஒன்று மேற்படி நிறை முப்பத்தெண் கழஞ்சும் **செப்புத்தளிகை** கைகள் அலகு நிலைப்படி செப்புத்தளிகை ஒன்று நிறை இருபத்தெண்பலம் **செப்புத்தளிகை** யொன்று நிறை ஐம்பதின்பலம் **செப்புத்தளிகை** நிறை இருபத்து நாற்பலம் **செப்புத்தளிகை** யொன்று நிறை இருபத்து ஒருபலம் **செப்புத்தளிகை** பொன்று நிறை இருபத்தறுபலம் **செப்புத்தளிகை** யொன்று நிறை இருபத்தைம்பலம் **செப்புபலித்தாளம்** ஒன்று நிறை ஐம்பத்துநாற்பலம் **செப்பின் கை வட்டணைக மூக்கிலாதது** வொன்று நிறை பதினொண்பலம் **செப்புத்தளிகை** யொன்று நிறை இருபத்தேழ்பலம் **செப்புக்காளம்** ஒன்று நிறை இருபதின்பலம் **செப்புக்காளம்** ஒன்று பதினைம்பலம் **செப்புக்காளம்** ஒன்று நிறை பதினாறுபலம் **செப்புக்காளம்** ஒன்று நிறை பதின்ஐம்பலம் துத்தரு இரண்டு நிறை பதினாற்பலம் **செப்புக்கலசம்** ஒன்று நிறை இருபத்திருபலம் செம்பின்மேற் பொன் கடுக்கின **பாவைக் கண்ணாடியில் ஆடுகிறபாவை** ஒன்று **மத்தளம் கொட்டுகிற பாவை** யொன்று பீடமொன்றுள்பட கண்ணாடி யொன்று நிறை எண்பதின்பலம் **தரா கெண்டி** யொன்று நிறை ஐம்பத்தெண்பலம் **தராச் சங்குக்கால்** ஒன்று அறுபலம் **தராச் சங்குக்கால்** நாற்பலவரை **தராச்சங்குக்கால்** ஐம்பலவரையும் **தராச் சங்குக்கால்** ஐம்பலமும் **தராச்சட்டிக்கால்** ஒன்று நிறை நாற்பத்தைம்பலமும் மேற்படி யொன்று நிறை இருபத்து நாற்பலமும் மேற்படி யொன்று நிறை நாற்பதின்பலம் **தராக்கால்** ஒன்று நிறை அறுபத்தேழுபலம் மேற்படி யொன்றினிறை எண்பத்தெண்பலம் மேற்படி அட்டணைக்கால் ஒன்றின் நிறை நூற்றைம்பதின்பலம்

மேற்படி **அட்டணைக்கால்** ஒன்றின் நிறை நூற்றெழுபத்தைம்
பலம் **தூப பாத்திரம்** ஒன்றின் நிறை ஐம்பதின்பலம் **தூப பாத்**
திரம் ஒன்றினிறை ஒன்பதின்பலம் **தூப பாத்திரம்** ஒன்றின்
நிறை ஏழுபலவரை **தூங்கு விளக்கின் தலை** ஒன்றின் நிறை
அறுபலம் **தராவிளக்கு** ஒன்றினிறை ஐம்பத்துமுப்பலம் மேற்
படி **ஈழச்சியல் விளக்**கொன்றின் நிறை உட்கருவும் நாராயமு
முட்பட இருநூற்று ப.......டி **மலையாண்சியல் விளக்**கொன்
றுட் கருவொடும் நாராயத்தொடும் நிறை மூந்நூற்றிருபதின்
பலம் **சோழியச்சியல் விளக்**கொன்று உட்கருவும் நாராயமு
முட்பட நிறை மூந்நூற்றொருபதின் பலம் **மலையாண்சியல்**
விளக்கு உட்கருவும் நாராயமுமுட்பட நிறை மூந்நூற்றிரு
பதின்பலமும் **சோழியச்சியல் விளக்கு** உட்கருவும் நாராய
மும் உட்பட நிறை நூற்றைம்பத்து நாற்பலம் மேற்படி விளக்கு
மேற்படியுள்பட நிறை இருநூற்றிருபதின் பலமும் மேற்படி
விளக்கு மேற்படியுள்பட நிறை ஐஞ்ஞூறுபலம் மேற்படி விளக்கு
மேற்படியுள்பட நிறை இருநூற்று நாற்பதின்பலம் மேற்படி
விளக்கு மேற்படியுள்பட நிறை பதினேழ்பலம் **அரைதலை**
விளக்கு உட்கருவும் நாராசமும் உள்பட நிறை மூந்நூற்றறு
பதின்பலம் விளக்கொன்று நாராயமு முட்கருவு முட்பட நிறை
இருபத்தெண்பலமும் **ஆரக்குடவிளக்** கொன்று ஒன்று நிறை
நூற்று எண்பத்தொன்பதின் பலம் மேற்படி விளக்கு நிறை நூற்
றறுபத்தறுபலம் **ஆரக்குடப்பாணைக்கா** லொன்று நிறை எண்ப
த்தெண்பலம் மேற்படி **பாணைக்கால்** ஒன்றின் நிறை நூற்றொரு
பதின்பலம் **தராசநுவம்** ஒன்றி னிறை நூற்றைம்பதின் பலம்
மேற்படி ஒன்றின் நிறை அறுபத்தைம்பலம் மேற்படி யொன்
றின் நிறை தொண்ணூறுபலம் மேற்படி ஒன்றி னிறை பத்தறு
பலம் மேற்படி யொன்றின் நிறை ஐம்பதின் பலம் **சவநுச்சட்டி**
யொன்றின் நிறை ஐம்பதின் பலம் மேற்படி யொன்றின் நிறை
நாற்பத்தைம்பலம் மேற்படி யொன்றின் நிறை இருபத்தைம்பலம்

இதன் தொடர்ச்சி இம்மலரின் ஈற்றிற் காண்க. (இ. ர்.)

தமிழ் எழுத்துக்கள்.

(135-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதல் சார்பு இனி, உயிர், மெய் என்பவற்றை முதலெழுத்தென்றும், குற்றியலுகரம் முதலியவற்றைச் சார்பெழுத்தென்றும் பின்னுளோர் கூறிவருகின்றனர். தொல்காப்பியனார் அகரமுதல் னகரவிறுவாய் முப்பதனையும் எழுத்தென்றதன்றி, முதலெழுத்தென்று கூறிற்றிலர். குற்றியலிகரம் முதலிய மூன்றனையும் சார்ந்துவருவன எனக்கூறி, அவையும் எழுத்துக்களோடு ஒருநிகரன என்றார். எனினும் 'மூன்றுதலை யிட்டமுப்பதிற் றெழுத்தின்' எனச் சார்பிற்றோற்றமும் எழுத்தென்னும் பெயரால் ஆளப்பட்டது. ஆயின், எழுத்தெனப்படுப முப்பத்துமூன்று எனக்கூறாது 'முப்பஃதென்ப..................மூன்றலங்கடையே' எனக்கூறியது என்னையெனின், அம்மூன்றும் தனித்தேனும், சாரியையொடு பொருந்தியேனும் வருதலின்றி, மொழியைச் சார்ந்தே வருதலாகிய சிறப்பின்மைபற்றி யென்க. இங்ஙனம் சிறப்பும் சிறப்பின்மையும்பற்றி வேறு பிரித்துக்கூறுவது ஆசிரியர்க் கியற்கை யென்பதனை, 'சொல்லெனப் படுப பெயரே வினையென், றாயிரண் டென்ப வறிந்திசி னோரே' எனவும் 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்று வழி மருங்கிற் றோன்று மென்ப' எனவும் சொற்களைப் பிரித்தோதுதல் முதலியவற்றானறியலாகும். குற்றியலிகரம் முதலிய மூன்றும் உயிரும் மெய்யும்போல அத்துணைச் சிறப்புடையன வல்ல வென்பதே ஆசிரியர் கருத்தாதல் 'சார்ந்துவரன் மரபின் மூன்று' என முதலிற் கூறியதனையே 'சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத், தேர்ந்துவெளிப் படுத்த வேனைமூன்றும்' எனப் பிறப்பியலுள் வலியுறுத்திக் கூறலானும் நன்கு துணியப்படும். அவ்வாறு கூறினாராயினும், முதற் சூத்திரத்து எழுத்தெனப் படுப-முப்பஃதென்ப-மூன்றலங்கடையே என, மூன்றுமல்லாவிடத்து முப்பதுஞ் சிறந்தன என்பதனால், மூன்றுமே

முப்பதினுஞ் சிறந்தன எனப்பொருள் கோடலும் அமையுமா லோ எனின்,' அங்ஙனம் பொருள் கொள்ளாமைக்கன்றே அடுத்த சூத்திரத்து அவற்றை 'எழுத்தோரன்ன' என ஓதினு ராயிற்றென்பது. இன்றேல் 'எழுத்தோரன்ன' என்பது பொரு ளில் கூற்றுமாறு காண்க. இவ்வுண்மை 'எழுத்தோரன்ன' வென வேண்டா கூறியவதனுன், முன் 'எனப்படுப' என்ற சிறப்பு அம் மூன்றற்குங் கொள்ளக் கிடந்தமையின், அது விலக்குதல் பெறுது மென்பது என இளம்பூரணராலும், இங்ஙனமே நச்சினர்க்கினியராலும் விளக்கப்பெற்றிருத்தலுங் காண்க. அற் றுயினும், சார்பிற்றேற்ற மென்பன மூன்றுமே எவற்றினுஞ் சிறப்புடையன வென்று காண்கின்றுமெனின், அங்ஙனமாயின் அது புதியதோராராய்ச்சியின் பயனென்றே கொள்ளப்படும். யாமும் அவ்வாராய்ச்சியின் பயனை இழத்தற்கு ஒருப்படுவேமல் லேம்.. தமிழ்ப் பற்றுடையார் பலரும் அன்னர் எனினும், அத னைத் தொல்காப்பியனுர் கருத்தாக வைத்து நலிந்து பொருள் கோடற்கும், புதிய ஆராய்ச்சியின் பயனுல் உளதாம் பெருமை யை ஆராய்ச்சியாளர்க் கன்றித் தொல்காப்பியனுர்க் களித்தற் கும் கருதுதல் பெரியதோரிழுக்காமென்க.

இனி, தொல்காப்பியனுர் சார்பிற்றேற்றம் மூன்றெனக் கூறியிருப்பவும், நன்னூலார் சார்பெழுத்துப் பத்தென்பாராயி னர்.

'உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு-அஃகிய இ உ ஐ ஔ மஃகான்-தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்' என்பது நன்னூல்.

யாப்பருங்கலமுடையார் உயிர்மெய், அளபெடை, ஐ ஔ மகாரங்களின் குறுக்கம் இவற்றைத் தனித்தனி எழுத்தென வேண்டினராயினும் ஆய்தக்குறுக்கமென ஒன்று கொண்டிலர். எனினும், யாப்பருங்கலவிருத்தி மேற்கோட் சூத்திரங்கள் சில வற்றில் ஆய்தக் குறுக்கமும் கூறப்பட்டுளது. இலக்கணவிளக்க முடையார் சார்பெழுத்து ஒன்பதெனக் கொண்டனர். ஆய்தக் குறுக்கங் கொண்டிலர். அதன் உரைகாரர், தொல்காப்பியனுர்

கூறிற்றிலராகலின் ஆய்தக் குறுக்கமென ஒன்று இன்றென்றியம்
பினர். இங்ஙனம் சார்பெழுத்துக்கள் பற்றிக் கருத்துவேறு
படுவாரெல்லாம் தொல்காப்பியனாரது ஆணைகடைப்பிடித்தலைப்
பெருமையாகக் கொள்ளும் ஒரு பெற்றியராகலின், யாமும்
தொல்காப்பியரது கருத்தினை ஆராய்ந்து காணற்பாலம்.

தொல்காப்பியனார் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்,
உயிரளபெடை, மகரக்குறுக்கம், உயிர்மெய் என்பவற்றை நூன்
மரபிற் பொதுவகையாலும், மொழிமரபிற் சிறப்புவகையாலும்
கூறியுள்ளார். இவற்றுட் குற்றியலுகரம் குற்றியலுகரப்புணரி
யலுள் மேலும் சிறப்பாகக் கூறப்பெற்றுளது. ஐகார ஔகாரங்
கள் குறுகுமென்பதனை மொழிமரபினும், ஒற்றளபெடையைச்
செய்யுளியலினும் கூறியுள்ளார். ஆய்தங் குறுகுமென யாண்டுங்
கூறிற்றிலர். இங்ஙனம் பிறர் சார்பெழுத்தெனக் கொண்ட
ஒன்பது தொல்காப்பியராற் கூறப்பட்டிருப்பினும், அவர் சார்
பெழுத்து மூன்றேயென்றும், அவற்றுடனுக எழுத்துக்கள்
முப்பத்து மூன்றே யென்றும் வரையறை செய்துகொண்டார்.
அதன்காரணம் என்னை யென்பதே இங்கு ஆராய்தற்குரியது.
உயிர்மெய்யை ஓரெழுத்தாகக் கொள்ளுதல் பொருந்தாதெனச்
சிவஞான முனிவர் தமது தொல்காப்பியச் சூத்திர விருத்தியில்
நன்கு விளக்கியுள்ளார். அது,

"இனி இம் மூன்றுமேயன்றி உயிர்மெய் முதலியவற்றை
யுஞ் சார்பெழுத்தென்பாரு முளராலோவெனின், அல் என்புழி
உயிர் முன்னும் மெய் பின்னும் நின்று மயங்கினாற்போல, லா
என்புழியும் மெய்முன்னும் உயிர்பின்னும் நின்று மயங்கினவே
யல்லது, உயிருமெய்யுமாகிய தந்தன்மை திரிந்து வேறாகா
மைக்கு 'மெய்யோடியையினு முயிரிய றிரியா' என்றற் றொடக்
கத்துச் சூத்திரங்களே சான்றாகலான், உயிர்மெய்யாகிய காலத்
தும் குறின்மை நெடின்மை யென்னும் உயிர்த்தன்மையும்,
வன்மை மென்மை இடைமை யென்னும் மெய்த்தன்மையும் தம்
மியல்பிற் றிரிவுபடாமையானும், உடன்மேலுயிர்வந்தொன்று
தல் பொன்மணிபோல இயல்பு புணர்ச்சியேயா மென்பவாகலா
னும், ஒற்றுமை நயத்தான் உயிர்மெய் யென்பதனைத் தகர

ஞாழல் போல உம்மைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை யென்பார்க்குத் தகரமு ஞாழலுங் கூடிய சாந்து பின்னர்த் தகரமு ஞாழலு மாகாதவாறுபோல மெய்யுயிர் நீங்கிற் றன்னுருவாதல் பொருந்தாமையானும், துணங்கை யென்பது மெய்ம்முதல் உயிரீறு மெய்ம்மயக்கமெனவும், வரகு என்பது உயிர்த்தொடர்மொழிக் குற்றியலுகர மெனவும் கொள்வதன்றி, உயிர்மெய் முதல் உயிர்மெய்யீறு, உயிர்மெய் மயக்கம், உயிர்மெய்த்தொடர்மொழிக் குற்றியலுகரம் எனக் கொள்ளாமையின் ஒற்றுமை நயம்பற்றி யொன்றென்பதனலொரு பயனின்மையானும், மெய்களெல்லாம் உயிர்வந்தொன்றாது தனித்து நின்றவழியே மாத்திரை கொள்ளவும் எழுத்தெண்ணவும் படுமென்பது அவற்றியல் பாகலின் அதுபற்றி யொன்றெனல் வேண்டாமையானும், அவ்வியல்பறிந்து கோடற்குத் தனித்து நின்றமெய்யை யொற்றெனவும் புள்ளியெனவும் உயிரோடு கூடிய மெய்யை உயிர்மெய்யெனவும் சிறப்புப் பெயரிட்டாளுதல் ஆசிரியர் கருத்தாகலானும், உயிரோடு கூடியவிடத்து வரிவடிவு வேறுபடுதலின் அதுபற்றிப் 'புள்ளியில்லா வெல்லா மெய்யும்' என மெய்மேல்வைத்துச் சூத்திரஞ்செய்து வடிவெழுத்திலக்கணங் கூறினரன்றி ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறாமையானும்......அது பொருந்தாதென மறுக்க" என்பது.

இங்ஙனம் உயிர்மெய் ஓரெழுத்தாகாதென்பதற்குச் சிவஞான முனிவர் கூறிய காரணங்களெல்லாம் மிக்க வலியுடையன வென்பதில் ஐயமில்லை. எனினும், கா முதலியன ஓரெழுத்தொருமொழியெனக் கொள்ளப்படுதலானும், செய்யுளியலில் அசை கொள்ளுமிடத்தும் பிறண்டும் உயிர்மெய்யை ஓரெழுத்தெனவே கொள்ளவேண்டியிருத்தலானும் உயிர்மெய்யை ஒருவாற்றால் ஓரெழுத்தாகக் கொள்ளுதலும் ஆசிரியர் தொல்காப்பியனர்க்குடன்பாடென்பது பெற்றாம். அதனாற்றான் பின்னூலாசிரியர்கள் உயிர்மெய்யைச் சார்பெழுத்துளொன்றாகக் கொண்டனராவர். எனினும் எழுத்தின் தன்மையை நோக்குழி அதன்கண் உயிரும் மெய்யும் வேறு வேறு புலப்பட நிற்றலானும்

உயிர்மெய்யென் ஒன்றுகொள்ளாது கா என்பது க் ஆ என எழுதப்படினும், எழுதுதற்கும் பயிலுதற்கும் சிறிது வருத்தமாவதன்றி வேறோரிழுக்குமின்மையானும் தொல்காப்பியனார் உயிர்மெய்யை வேறெழுத்தாக வைத்தெண்ணிற்றிலர். இங்ஙனமே வடநூலார் முதலாயினாரும் உயிரும் மெய்யுஞ் சேர்ந்ததனை ஓரெழுத்தாக வைத்தெண்ணுமையும் காண்க. (தொடரும்.)

பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டார்.

திருத்தக்கதேவர் கவித்திறம்.

தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் முதன்மையானதும், சொன்னயம் பொருணயங்களால் ஆரு வின்பமளிப்பதுமான சீவக சிந்தாமணியின் ஆசிரியராம் திருத்தக்க தேவரை அறியாத தமிழ்மக்கள் அரியர். ஒன்பான் சுவையும் ஒருங்கே அமையப்பெற்று இன்பச்சுவை சாலத் ததும்பிநிற்கப் பெறுவதோர் நூலெனினும், தவம், தானம், சீலம் இவைகளை மக்கட்குப் போதிப்பதே இந்நூலாசிரியரின் சிறந்த கருத்தென்பது இந்நூலை நுனித்து நோக்குவார்க்குப் புலனாகும். இவரது பல்வேறு வன்மைகளிலும் மக்கட்கு நீதி கற்பிக்கும் வன்மை தனி பாராட்டற்பாலது. இவர் சைன சமயி என்பதும், அச்சமயக் கொள்கைகளுக் கிணங்கவே பல்வேறு நீதிகளைப் புகட்டியுள்ளனர் என்பதும் அந்நூலினை ஒருமுறை கற்பாரும் உணரலாகும். இவர்தம் நூலிற்கண்ட சமயக் கொள்கைகளைப் பிறிதொரு அமயம்கூற எண்ணி, இப்பொழுது, இவர் மக்கட்கு நீதிபோதிக்கும் முறைமையினைச் சிறிதாராய்வாம்.

சிறப்புடைத்தாகக் கருதப்படும் நூல்கள்போலச் சிந்தாமணியும் அறமுதல் நான்கினையும் அடைவே அடையும் வழியினைத் தெரிக்கும் ஒரு சிறந்த பனுவலாம். இதன் ஆசிரியர் முற்றத் துறந்த முனிபுங்கவர் என்பதும், கொலை, களவு, காமம், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், அவாவுறுதல் முதலான கொ

டிய செய்கைகளை அறவே கடிந்தவர் என்பதும் இவர் நூற்கண் அவைகளைப் பன்முறையும் கடிந்து கூறுவதானே உணரலாகும். மானிடப் பிறப்பினதருமை, இளமைநிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை இவைகளைக் குறித்தும், தானம் தவம், சீலம், கல்வி, கற்பு, அரசர்பண்பு முதலியவைகளைக் குறித்தும் பல இடங்களிலும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும், உவமை முகத்தானும் படிப்பவர் மனதிற் பசுமரத்தாணியெனப் பதியுமாறு கூறிச்செல்வர். முத்திஇலம்பகத்தில் மனிதப் பிறப்பின் அருமையைக் குறிக்குங்கால்,

"பரவைவெண்டிரைவடகடற்படுநுகத்துளையுட்
டிரைசெய் தென்கடலிட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே."

என்று மக்கள் யாக்கையைப் பெறுதல் தென்கடலிலே போகட்டதோர் கழி வடகடலிலே கிடக்கும் நுகத்துளையிலே முதற் சென்றெய்தி, அவ்வளவேயன்றி அத்துளையினடுவே சென்று செறிந்ததென்னும்படி அரிதாகவிருக்கின்றதென்பர். பெரிதும் அரிதெனக் கருதும் எச்செயற்கும் இவ்வுவமையைக் கூறுதல் மரபுபோலும். **திருச்சிற்றம்பலக்கோவையாரிலும் மணிவாசகப்பெருமான்** மனமொத்துக் கலந்த தலைவன் தலைவியர் கூட்டத்திற்கு

"வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தென"

என இவ்வுவமையையே கூறிப்போந்தனர்.

இவ்வாறு மானிடப் பிறப்பின் அருமையைக் குறித்துப் பின்னர் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை இவைகளைப் பற்றி நன்கு கூறுவர். இளமையின் நிலையாமையைக் குறித்து

"மைதிரண்டவார்குழன்மேல்வண்டார்ப்பமல்லிகைமென்
மாலைசூடிக்
கைதிரண்டவேலேந்திக்காமன்போற்காரிகையார்
மருளச் சென்றோர்

ஐகிரண்டு கண்டங் குறைப்பவோர் தண்டீன்றி
யறிவிற் றள்ளி
நெய்திரண்டாற் போலுமிழ்ந்து நிற்கு மிளமையோ
நிலையா தேகாண்"

எனத் தொடங்கி, யாக்கை கருவாயிருக்கும் காலத்திலும் அழிவு பெறும்; அங்ஙனமின்றிக் குறையா உருவினொடும் பிறந்து இருமுதகுரவரும் அழக்கெடினும் கெடும்; அவ்வழிக் கேடின்றேல் நூல் பலகற்று மகளிர்க் காங்களுய் ஒளிரும்காலத்தே அழியினும் அழியும் என முத்தியிலம்பகத்தில் யாக்கையின் நிலையாமையினை மனத்துப் பதியுமாறு கூறுவர். கேமசரியாரிலம்பகத்தில்

"மன்னுநீர் மொக்குளொக்கும் மானிட ரிளமையின்பு
மின்னினொத் திறக்கும்செல்வம் வெயிலுறு பனியினீங்கும்"

எனவும், கனகமாலையாரிலம்பகத்தில் விழுக்கு முதலியவற்று னிறைந்த இப்புன்புலால் யாக்கை விளைகின்ற காமத்தாலே காக்கை கரிக்குருவிக்குப் பொன்போற்றேன்றும் கொள்கைபோலத் தோன்றும் தன்மைத்தென்பர். மற்றும், அதே பகுதியில்

"உருவமென் றுரைத்தி யாயி னிறைந்ததோற்
றுருத்தி தன்னைப்
புருவமுங் கண்ணு மூக்கும் புலப்பட வெழுதி வைத்தாற்
கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம
வெரியெழ விகற்பித் திட்டா ரிறைச்சிப்போர் தனை"

என்று, மக்கள்யாக்கையினதிழிவைக் குறிப்பர். இச்செய்யுளை நோக்கும் பொழுது

"ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் றுருத்தியை"

என்ற பட்டினத்தடிகள் பாடல் நினைவிற்கு வருகின்றது.

காமத்தினுல் விளையும் கேடுகளையும், அதன் கொடிய பண்புகளையும் விரிவாக வுரைப்பர் நம் தேவர். சிந்தாமணி என்ற காப்பியமே அரசினைச் சிறிதும் கருதாது, மாதர் இன்பமே பெரிதெனக் கருதி மந்திரியின் சூழ்ச்சிக் குட்பட்டிறந்த மன்னனும்

சச்சந்தன் சரிதத்தை முற்கூறுவதாற், காமத்தினல் நிகழும் கேடு கட்கோர் எடுத்துக் காட்டாகும். பதுமையாரிலம்பகத்தில் பழுத்த காமம் கடலின் மிக்கு ஆடவர் நெஞ்சைப் பிணித்த தேனும் அக்காதலர் காதல்

"உள்ளுற வெந்த செம்பொன் உற்றநீர்ப் புள்ளியற்றால்" என உவமிப்பர். பெண்ணாசையை அறவே ஒழிக்கவேண்டும் என்றும் "குழனிமிர் கிளவியார் கோலமஞ்சினர், தொழ நிமிர்ந் தமராய்த் துறக்க மாள்வரே" என்றும் கூறுவர். மாதர்களின் நிலையிலா அறிவையும், மனவுறுதிக் குறைவையும் குறித்துப் பல விடங்களிலும் பேசுவர். எடுத்துக்காட்டாகக் கனகமாலையாரிலம் பகத்தில் "அன்பு நூலாக" எனத் தொடங்கும் செய்யுட்கண், இன்சொல்லாகிய பூவைவைத்துச் கட்டிக், காதலாகிய சாந்தாலே கைபுனைந்து, ஏற்ற இன்பஞ் செய்கின்ற காமமாலையை நங்கை மார்க்குப் பகற்பொழுதினும் சூட்டி நீங்காதிருப்பினும், அவர்க் குக் கண்ணும் மனமும் பிறர்பின் செல்லுமெனவும், பெண் ணென்று கூறப்படுவன மனவலி யுடையு வல்ல: குடிப்பிறப் புக் கெடுமென்று பாரா, நிறையுடையவல்ல ஓராயிர மனத்த வாகும் "எண்ணிப்பத் தங்கையிட்டால் இந்திரன்மகளு மாங்கே, வெண்ணெய்க்குன் றெரியுற்றுற்போன் மெலிந்துபின் னிற்கும்" என்றும் பொதுவாக மகளிரியல்பினைக் கூறுவர். ஆனல் இல் வாழ்க்கையையே தீவினையச்சத்தின்பாற் படுத்துக்கூறும் சமண சமயத்தைச் சார்ந்த இம்முனிவர் மாதரைப்பற்றி இவ்வாறிழித் துக் கூறினது வியப்பாகாது. இவ்வாறு பொதுப்படக்கூறினும் தேவர் கற்புடைமகளிரியல்பினை வகுக்குங்கால்

"சாமெனிற் சாதனேதல் தன்னவன் தணந்தகாலைப்
பூமனும் புனைதலின்றிப் பொற்புடன் புலம்பிவைகிக்
காமனை யென்றும் சொல்லார் கணவற்கை
தொழுதுவாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்லல்
தீர்ப்பார்."

என மொழிவர்.

மேலும் யாக்கையினது நிலையாமையினைப் பலவிடத்துக் கூறினும், வீடுபேற்றினை எய்துதற்கு அது ஒரு சிறந்த கருவியென்பது அவர்க்கும் உடன்பாடே. அவரே நாமகள் இலம்பகத்தில்

"பேரஞ ரிடும்பையெல்லாம் பிளந்திடும் பிறப்புநீக்கும்
ஆரமிர் தரிதிற்பெற்று மதன்பயன் கோடல்தேற்றும்
ஒருமைம் பொறியுமோம்பி யுளபகல் கழிந்தபின்றைக்
கூரெரி கவரும் போழ்து கூடுமோ குறித்தவெல்லாம்"

என்று மனிதயாக்கை ஓரமிர்தெனவும், அதுநிலையாயிருக்கும் போழ்தத்தே "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழிக்கேற்ப நல்வழிக்கான புண்ணியத்தை நாடவேண்டுமென்றும் வற்புறுத்துவர். யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் அவ்யாக்கைபாலாய பயன்கொள்க என்றதற்கேற்ப, வழியாகிய மானிடப்பிறவியால் வீடுபேற்றினை யடைய முயலுதல் இன்றியமையாததென்றும் கூறி அங்ஙனம் முயற்சிசெய்யாது வாளாவிருக்கும் வினையாளர்க்கு மதியிலர்க்கிரங்குவர். நல்லறத்தை யோராது யாக்கையினை அவமே கழுகுண்ணப் புள்ளிற்கே புறஞ்செய்வார் பலரென்றும், தாமும் நுகராது பிறரையும் நுகரவிடாது செல்வத்தைச் சேமித்துப் பின்னர் உயிர் நீங்கும் தறுவாயில் தாம் புதைத்துவைத்திருக்கும் பணமுடிப்பைக் கையாற் காட்டக், 'கூடவிருப்பவர் வாய்பேசக்கூடவில்லை கைச்சைகை செய்கின்றார் விளங்கனி கேட்கின்றார்போலும் அதற்கிது பருவமன்றே' எனஇரங்கி யழுதற்கு முன்னே பிறர்க்குக் கொடுத்துத் தாமும் துய்ப்பதை அறிவுடையோர் கருதுவாராக எனவும் தெளிவுபெற வுரைப்பர். இக்கருத்து

"சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்—இறுகிறுகிப்
பின்னறிவாம் என்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்"

என்ற நாலடிச்செய்யுளை நினைவூட்டுகின்றது.

இதுவன்றிக் காமவின்பத்தாற் கட்டுண்டவழி, பிரிவு ஏற்படின் பரிவுகொள்ளும் காதலர் காதலியர்க்குப் பலதேறுதல்களையும், நீதிகளையும் தேவருரைப்பர். சச்சந்தனைப் பிரிய நேர்ந்ததால் வருந்திய விசயாதேவிக்கு மன்னவன்,

"சாதலும் பிறத்தலும் தம்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவைபொருட்
கியல்புகண்டாய்
நோதலும் பரிவுமெல்லாம் நுண்ணுணர் வின்மையன்றே"

எனவும்,

"தொல்லைநம் பிறவியெண்ணிற் றொடுகடல் மணலுமாற்றா
எல்லைய வவற்றுளெல்லாம் ஏதிலம் பிறந்துநீங்கிச்
செல்லுமக் கதிகள்தம்முட் சேரலம் சேர்ந்துநின்ற
இல்லினு ளிரண்டுநாளைச் சுற்றமே இரங்கல்வேண்டா"

எனவும், விதியானது யாவராலும் வெல்லப்படாத தொன்றெனவும், தோன்றிய எப்பொருட்கும் அழிவு உறுதியே எனவும், பிறவிகள் எண்ணிற் கடங்காவென்பதும், அந்தந்தப் பிறவிகள் தோறும் தொடுக்கும் அன்பு அங்கங்கே முடிவுபெறும் எனவும், ஆகவே அவ்வன்பு நிலையுள்ளதெனக் கவல்வது மடமையெனவும் செவ்வனே விளக்குவர். பின்னும் சீவகனைப் பிரிந்தவழி, மனங்கலங்கியழுத பதுமையாரிடம் அன்னவள் தோழி கூற்றாகத் தேவர் பிரிந்ததற்காக இரங்கியழுத கண்ணீர் கடல் வெள்ளத்தினும் மிக்கதென்றும், துன்பத்தை இன்பமெனக் கோடலே மனவமைதியைத் தருவதெனவும் எடுத்துரைப்பர். திருவள்ளுவரும்,

" இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு"

எனக் கூறின ரன்றோ !

ஆனால் இந்த மனவமைதியை எஞ்ஞான்றும் தரக்கூடியது தக்க கல்வியன்றே. ஆகலின், அதன் இன்றியமையாமையையும், பயனையும் பாராட்டி,

" கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின்கண் ணுமாகும்
மெய்ப்பொருள்விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர்
துணையுமாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம்
துணைவியாக்கும்
இப்பொருள் எய்திநின்றீர் இரங்குவதென்னை "

எனக் கல்வியினது சிறப்பை அழகுபெறக் கூறுவர். மற்றும் நல்வழியுதவவல்ல தானம் தவம் இவைகளைப்பற்றிப் பலகாலும் எடுத்துக் கூறுவது தேவரியல்பு.

" முருந்தனைய தூமுறுவல் முற்றிழையார் சேரி
யிருந்திளமைக் கள்ளுண் டிடைதெரிதலின்றிக்
கருந்தலைகள் வெண்டலைகளாய்க் கழியுமுன்னே
அருந்தவமுந் தானமு மாற்றுமினே கண்டீர்" எனவும்

" உடற்றும் பிணித்தீ யுடம்பினுயிர் பெய்திட் (டு)
அடுத்துணர்வு நெய்யாக வாற்றறுவை யாகக்
குடித்துண்ணுங் கூற்றம் குடில்பிரியாமுன்னே
கொடுத்துண்மின் கண்டீர் குணம் புரிமின் கண்டீர். "

என்றும் மக்கட்குப் போதிப்பர். இவ்விரண்டு செய்யுட்களினு முள்ள " கருந்தலைகள் வெண்டலைகளாக்கழியு முன்னே " என்ற தொடரும் "குடித்துண்ணும் கூற்றம் குடில் பிரியாமுன்னே " என்ற தொடரும், தேவர் யாக்கையினிடத்துக் கொண்ட அருவருப்பினையும், அகங்கை புறங்கையாவதுபோல் அத்துணை விரைவாக இளமை முதுமையாக மாறி ஒழியுமாலைத்தென்பதை யும், 'காலந் தாழ்க்காது நற்செய்கைகளை அவ்வப்போழுதே உஞற்றவேண்டிய கட்டாயத்தையும், மரணம் என்றும் யாவர்க் கும் உறுதி என்னும் உண்மையையும், காலந்தாழ்ப்பின் உய்வில்லை என்ற உட்கோளினையும் நன்கு மனத்தில் தைக்கு மாறு கூறப்பட்டுள்ளதை உற்றுநோக்கின் உணரலாகும்.

இன்னும், தேவர்நீதி கூறும்வகைகள் பற்பலவாகும். அவரது பெருங் காப்பியம் சச்சந்தன் என்னும் அரசனையும், அவன தரு மைக்குமாரனன சீவகனையும் பற்றியதால், அரசர்கள் கைக் கொள்ளவேண்டிய பண்புகளைச் செவ்வனே தெரிப்பர். சச்சந்

தன தரசியலைக் கூறுமுகத்தான் மன்னர்க்கின்றியமையாப் பண்புகளை யெடுத்துரைப்பார். நச்சுநாகத்தினது சீற்றத்தோடும் கூடி அச்சமுற் றடைந்தார்க் கமிர் தம்போன் றும், வன்கையாற் கலிமாற்றுபவனுகவும், வேலினுற் பகைவரை வெல்லும் ஆற்றல் மிகுந்தவனுகவும், திருமாமகள் கண்ணிற்கு எஞ்ஞான்று மிடனுக வும், உலகொப்ப நிழற்றலால் யாவர்க்கும் தாதைபோன் றும், அரசன் இருத்தல் வேண்டுமென்பர். இவையேயன்றி, அரசநீதி யாலே ஆறிலொன்ருக அறுதியிட்டுப் பொருளையீட்டுதல், தொன்றுதொட்ட பகையைத் தன்னெஞ்சிலே நிலைபெறுத் தல், முள்ளைக்கொண்டு முள்ளைக்களைபவர்போலத் தமக்கொன் ருராய் உறவாயிருப்பவ ரிருவரைத் தம்மிற் பேதுசெய்து ஒரு வரைக் கொண்டொருவரை மோதியிடுதல் முதலிய பண்புகள் இன்றியமையா வென்பர். விமலையாரிலம்பகத்தில் தேவர்,

"ஒற்றர் தங்களை யொற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே"

என அரசர் ஒற்றுளும் வகையைக் கூறுவர். இச்செய்யுளின் கருத்தும் இதற்குமுன் கூறிய முள்ளைக்கொண்டு முள்ளைக்களை தல்" என்றகருத்தும் முறையே,

"ஒற்றினு னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில்"
"சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"

என்ற திருக்குறட் பாக்களையும்,

"தெள்ளி யுணருந் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகையைப் பெறுத லறுதியே
கள்ளினுற் கள்ளறுத்தல் காண்டு மதுவன்றே
முள்ளினுன் முட்களையு மாறு"

என்ற பழமொழி வெண்பாவினையும் நினைவூட்டுகின்றன. பின் னும், விமலையார் இலம்பகத்தில்,

"அஞ்சனக் கோலினற்று நாகமோ டருவிக்குன்றிற்
குஞ்சரம் புலம்பிவீழக் கூர்நுதி யெயிற்றிற் கொல்லும்
பஞ்சியின் மெல்லிதேனும் பகைசிறி தென்னவேண்டா
அஞ்சித்தற் காத்தல் வேண்டும் அரும் பொருளாக
வென்றான்"

என்ற செய்யுளில் அரசர் பிறரை உருவாற் சிறியவரென இகழ்தல் தீங்கு விளைக்கும் என்பர். இக்கருத்து,

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து"

என்ற குறட்பாக் கருத்தை ஒட்டி நிற்கின்றது. மற்றும் தமக்குப் பற்றானவரை,

"பொருந்தலாற் பல்லிபோன்றும் போற்றலர்த் தாயரொத்தும்
அருந்தவர் போன்று காத்து மடங்கலா லாமைபோன்றும்
திருந்துவேற் றெவ்வர்போலத் தீதறவெறிந்து மின்ப
மருந்தினன் மனைவி யொத்தும்"

காக்க வேண்டுமென்றும், பூமாலை முதலியவற்றைப் புள்ளின் கண்ணினும், சேவலின் முகத்தினும் உறுத்தித் தூய்மை கண்டல்லது கைக்கொள்ளக்கூடாதென்றும், தண்ணீரிலும் சோற்றிலும் தீங்குவாராமற் காத்தற்குக் குரங்கிற்கிட்டாராய்வது பார்த்திவர் கடனென்றும் சொல்வர்.

நிற்க, உவமை முகத்தான் பல நீதிகளைத் தெளிவுபெறக் கூறுவது தேவரியல்பு. மண்மகளிலம்பகத்திற் சீவகன்வெஞ்சுரமொன்றைக்கடந்து சென்றமையைக் குறித்துப் புனையுங்கால்

"நிலையிலா வுலகி னின்றவன் புகழை வேட்ட வனிதியமே
போன்றும்
இலைகுலாம் பைம்பூ ணிளமுலைத் தூதி னின்கனித்தொண்
டையங் துவர்வாய்க்
கலைவலார் நெஞ்சிற் காமமேபோன்றும் கடவுளர் வெகுளியே
போன்றும்
உலைவிலார் நில்லா தொருபகலுள்ளே யுருப்பவிர் வெஞ்சுரம்
கடந்தார்"

என்று அவர் கடுகிச் சென்றமையை உவமைமுகத்தான் அழகு பெறக் கூறுவர். இலக்கணையார் இலம்பகத்தில் நீதி சான்ற அரசர் கோமானது ஆக்கத்தின் பெருமையையும், நீதியற்ற அரசனது ஆக்கச்சிறுமையையும் வியப்பாகவும், மனதிற்காலூன்றுமாறும் கூறினர். சீவகனைப் பார்க்கவந்த மடந்தையரைப் புனைந்துரைக்குமிடத்து,

"பெரும்பொருணீதிச்செங்கோற் பெருமக னக்கம்போலப்
பரந்திட மின்றி மேலாற் படாமுலை குவிந்து கீழா
லரும்பொரு ணீதிகேளா வரசனிற் சுருங்கி நந்து
மருங்குநொந் தொழியவீதி மடந்தைய ரிடங்கொண்டாரே"

என்றும்

"செல்வர்க்கே சிறப்புச் செய்யுந் திருந்துநீர் மாந்தர்போல
வல்குற்குழலைக்கு மீந்தா ரணிகல மாயவெல்லாம்
நல்கூர்ந்தார்க்கில்லை சுற்றமென்றுநுண் ணுசுப்புநைய
ஒல்கிப்போய் மாடம் சேர்ந்தார் ஒருதடங் குடங்கைக்
கண்ணார்"

எனவும் கூறிய செய்யுட்கள் கலாவிநோதர்களை இறுகப் பிணிக்கக்கூடியவைகள். இச் செய்யுட்களான் நீதியுள்ள அரசர்க்குச் செல்வம் சிறக்கும் என்பதும், நீதியில்லானுக்குக் குறையுமென்பதும், மக்களதியல்பு பெரும்பாலும் செல்வர்க்கே சிறப்புச் செய்வதென்பதும், நல்கூர்ந்தார்க்குச் சுற்றமில்லை என்பதுமான உண்மைகள் எத்துணை அலங்காரமாகவும், மனதில் ஊன்றுமாறும் கூறப்பட்டுள்ளன. இவ்வண்ணமே கொடுத்துண்டறியாதாரைக் கூறுமிடத்து,

"மண்ணார் சட்டி கரத்தேந்தி மாநாய் கௌவும் காலினராய்
அண்ணாந் தேங்கி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோம்
அம்மம்ம!
பண்ணார் மொழியார்பாலடிசில் பரிந்தங்கூட்ட முகந்திரும்பி
உண்ணுநின்ற போதொருவர்க் குதவாமாந்த ரிவர்தாமே"

என இழித்துக் கூறுவர். நாமகள் இலம்பகத்தில்,
"குழற்சிகைக் கோதைசூட்டிக் கொண்டவனிருப்ப மற்றோர்
நிழற் றிகழ் வேலினானை நேடிய நெடுங் கணாளும்

பிழைப்பிலாட் புறந்தந்தானும் குரவரைப் பேணல்செய்யா
திழுக்கின ரிவர்கள்கண்டா யிடும்பைநோய்க் கிரைகளாவார்"
எனவும்

"நட்பிடைக் குய்யம் வைத்தான் பிறர்மனை நலத்தைச்
சேர்ந்தான்
கட்டழற் காமத்தீயிற் கன்னியைக் கலக்கினனும்
அட்டயி ருடலந்தின்று வமைச்சன யரசுகொன்றுன்
குட்டநோய் நரகந் தம்முட் குளிப்பவரிவர்கள்கண்டாய்"

எனவும் பிறனைவிழைதல் முதலாய கொடிய செய்கைகளைக் கடிந்து பேசுவர்.

இதுகாறும் தேவர் கூறியுள்ள நீதிகளில் சிலவற்றை ஒருவாறு தொகுத்தனம். இன்னும் இவரது பெருங்காப்பியத்தில் பொதிந்துள்ள நீதிகள் பலவாகும். அவைகளைக் கலாவிநோதர்கள் நன்கு கற்றாராய்ந்து கடைப்பிடிப்பதுடன் பிறர்க்கும் அவைகளைத் தெரிப்பின் மிகுந்த இன்பத்தையும் பயனையும் விளைக்குமென்பதற் கையமின்று. தமிழ்மக்கள் இத்தகைய சிறந்த நூல்களைக் கற்றுணர முன்வருவாராக.

E. S. வரதராச ஐயர், B. A.,

திருவாசகச் சிற்றாராய்ச்சி.

திருவாதவூரர் காலம்.

(159-ம் பக்கத்தொடர்ச்சி)

முன் மலரில் தோன்றிய வியாசம் எழுதி விடுத்தபின் திருப்பெருந்துறைக்குச் சென்று அங்கு அமைந்துள்ள அருமைக் கோயிலைக் காணும் பேறு பெற்றேம். கட்டிடம் கட்டியுள்ள முறையையும் வேலைத் திறத்தையும் உற்றுநோக்கில், 'கர்ப்பக் கிருகம்' 'அர்த்தமண்டபம்' 'நிவேதன மண்டபம்' அதை யடுத்துள்ள 'சுந்தரபாண்டிய மண்டபம்' ஆகிய நான்கும் ஒரே காலத்தில் செய்யப்பட்ட வேலையினவாகவும், மற்ற மண்ட

பங்கள் முதலியவைகளுக்கு முன்னதாகவே கட்டப்பட்டனவாக வும் காணப்பெற்றன. இந் நான்கு பாகங்களின் கொடுங்கையும், சுவர்களும் பக்கத்திலுள்ளவைகளோடு கலக்காமற் பிரிந்து நிற் கின்றன. சிறந்த ஓவிய வேலைகளும் இங்கு இல; தூண்களும் மண்டபமும் பொதுவாகவே கட்டப்பட்டிருந்தாலும் அவை களின் அளவைமானம் நன்குபொருந்தியமைந்துள்ளது. தில்லை மண்டபம், பஞ்சாட்சர மண்டபம் முதலிய பிற்காலத்தன என நன்கு விளங்கும். இவைகளிற்முன் மிகுவியப்பினவாய் அழகு வாய்ந்த சிலாவிக்கிரகங்கள் உள. இப் பஞ்சாட்சர மண்டபம் கலி 3700 ஆண்டில் கட்டப்பட்டதென இங்குள்ள கல்வெட்டுக் கள் கூறுவதாக மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் திருப்பெருந்துறைப் புராண முகவுரையில் கூறியுள் ளார். இப் பஞ்சாட்சர மண்டபத்தில் உள்ள கற்றூணில் இவ் வூரினையுடைய பரிமேலழகர், பாண்டியர், மாணிக்கவாசகர் மிழலைவேளாளர் திருவுருவங்கள் வெகு சிறப்பினவாகக் காண லாம். இக்கோவிலின் கீழ் நிலமெல்லாம் மிழலைவேளாளரது எனச் சொல்லப்படுகிறது. திருவாதவூரரின் திருவுருவம் 1300- ஆண்டுகளுக்கு முன்னதாயின், அவர் சரிதகாலம் அதைவிட எத்துணையோ முன்னதாகவேண்டும் எனக் கூறவேண்டிய தில்லை.

தில்லைமண்டபத்தில் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலிய இத்தலஇயைபுற்றவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. அஃதன்றியும் பஞ்சாட்சரமண்டபம் இடவசதியுடன் வெளிப் பிரகாரத்தில் உளது; தில்லைமண்டபம் உட்பிரகாரத்தில் நெருங்கி யுள்ளது. இவைகளைக்கொண்டு பஞ்சாட்சரமண்டபம் தில்லை மண்டபத்துக்கு முன்னதாக ஏற்பட்டிருக்கக்கூடும் என்று துணி யலாம்.

பஞ்சாட்சர மண்டபமே கலி 3700 வருஷத்தில் எழுந்த தென்றால் கருப்பக் கிருகம் சேர்ந்த கருங்கல் மூல ஆலயம் அக் காலத்துக்குப் பின்னையதன்று என்பது திண்ணம். திருவாசகத் தில் பல்வேறு இடத்தில் குருந்த மரத்தடியில் திருவாதவூரர் குருஉபதேசம் பெற்றதாகச் சொல்லுவதால், இத்தலம் குருந்த

வனமாக இருந்தகாலமே அவர்காலமாகவேண்டும். "கோயில் வாயிலில் பிச்சனுக்கினுப்" (திருச்சதகம். 96) என்றது கூட இக்காலத்துள்ள கருங்கற் கோவிலாகாது. ஏனெனில், தென்னிந்தியாவில் மிகப் பழந்தமிழர்கள் முற்காலத்தில் வனங்களில் மரத்தடியில் கடவுளை வழிபட்டு வந்தார்கள் என்பது ஒவ்வொரு தலபுராணத்தின் மூலத்தைக் காணுங்கால், பெரிதும், கடம்பவனம், மருதவனம் என்பனபோல் ஒருவகை வனமாவதிலிருந்து அறியக்கூடும். அவ்வகை வனத்தில் கோவில் கட்ட எண்ணம் வந்தவுடன் ஒரே வகையாக அலங்காரமும் அழகும் வாய்ந்த தூண்களுடன் கருங்கல்லால் மட்டுமே கட்டுவது இயற்கையன்று. சிறு குடில்போன்ற கல் மர ஆலயங்கள் அமைந்திருந்த பின்னரே இப்போதுள்ள கோயில்கள் அமையக் கூடும்.

சோழநாட்டுக் கோவில்களைப்பற்றிக் கூறுமிடத்து அப்பர் சுவாமிகள் காலத்து அரசாண்ட **குணபரன்** ஆணையாக, விழுப்புரத்துக்கு அண்மையிலுள்ள மண்டகப்பட்டுக் கல்வெட்டில் "என்னுடைய காலத்தில் இங்கே கல், மரம், உலோகம், சுண்ணம்பு முதலியவைகளைக் கொண்டு கோவில் கட்டுகிறார்கள். விசித்திரசித்தனை நான் தமிழ்நாட்டு என்குடிகளுக்குக் கருங்கல் ஒன்றைக்கொண்டே கோவில் கட்டுவதைக் காட்டுவேன்"என்று காண்பது இதற்குச் சான்றாகும்.

ஆதலின், திருவாதவூரர் திருப்பெருந்துறையில் உபதேசம் பெற்ற காலத்திருந்த கோவில் குருந்தவனமுழுதும் அழியாததற்கு முன்னமும், இப்போதுள்ள கற்கோவில் அமைவதற்கு முன்னமும் இருந்த ஒரு சிறு குடிலாகும். ஆதலின், மூல ஆலயமான கர்ப்பக்கிருகம் பஞ்சாட்சர மண்டபத்துக்கு அதிக முந்திய காலமாகவேண்டும். இந்த இடைக்காலம் குறைந்தது 400, 500-ஆண்டுகளானுற்கூட, கோவிலின் பழைமை கலி 3300-ஐச் சாரும்.

திருவாதவூரர் திருவவதாரம் செய்தகாலமும் இதுவே யாகுமென நாம் நம்புவோம்.

குருந்தமர இயல்பு.

திருமணிவாசகப்பெருமான் அருள்பெற்ற-குருநாதர் அமர்ந்திருந்த-குருந்தமரம் தற்காலத்து இல்லையாயினும், கோவிற் பிராகாரத்தில் இரண்டு குருந்த மரங்கள் இப்போதும் இருக்கின்றன. இம் மரங்கள் நாரத்த மரத்தைப்போன்று கறுத்த பட்டையுடன் விளங்குகின்றன. இலைகள் வில்வத்தைப்போன்று முக்கிளையாக இருக்கின்றன. நடுவில் உள்ள இலை பக்க இலைகளைவிடச் சிறிது பருமனானது. இலை கரும்பச்சையாகத்தடித்துளது. காய்களும் பார்வையில் நாரத்தையைப்போன்றும், ஆனால் சிறியவும், சுவை அற்றவுமாக இருக்கின்றன.

குருந்தமர இயல்பு நான் விசாரித்தவரையில் பலருக்குத் தெரியவில்லை. அன்றியும், இவ் வரலாற்றுச்சிறப்பை விளக்க வெளியாகும் படங்களிற்கூட இம் மரத்தின் இயல்பு நன்கு காணவில்லை. திருவாளர், கோயம்புத்தூர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றிய "ஸ்ரீமாணிக்கவாசகர் அல்லது சீத்தார் பெருமை" என்ற கோவை வெளியீடும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் சமீபத்தில் வெளியிட்ட 'திருவாசகமும்' இதற்குச் சான்று. கூடிய வரையில் இயற்கைக்கு இசைய உருவங்கள் உள்ளனவே பொருந்துவன.

திருவாசக மூலச்சுவடி.

திருவாசக மூலச்சுவடியையோ, அல்லது முற்காலச் சுவடிகளையோ தற்காலத்தில் கண்டவர் இலர் என்றே கொள்ளலாம். ஆயினும், இப்போதைய பிரதிகளில் உள்ள திருவுள்ளக்கிடையையும், "தொல்லை யிரும்பிறவி" எனவரும் முற்கூற்றையும் ஆன்றோர் ஒருவரோ இருவரோ செய்திருப்பினும், தல முறை பின்னரே சேர்க்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. திருவுள்ளக்கிடையைப்பற்றிய சிறப்பினைப் பின்னர் ஆய்வோம்.

எச் சமயத்தில் எப்பதிகம் பாடப்பட்டது என்ற வினவுக்கு ஒருவாறு விடை பெரும்பற்றப் புலியூர்நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடலிலும், கடவுண் மாமுனிவர் பாடி

யருளிய திருவாதவூரர் புராணத்திலுமே காணக்கூடும். இவ்விருவர் கூறுவதிலும் ஒன்றுக்கொன்று பெரும்மாறுபாடு அடையும். இவைகளைப் பின்னர்த் திருவாசகம் பாடப்பட்ட முறையில் எடுத்து விரிக்கலாம். கடவுண்மாமுனிவர், காஞ்சிப்புராணம் இயற்றிய கச்சியப்ப முனிவர் காலத்தவரானதால், இற்றைக்குச் சுமார் 200-வருஷங்களுக்கு முன்னவர். பெரும்பற்றப் புலியூர்நம்பி காலமோ இற்றைக்குச்சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னரென்று இதுவரை எடுத்துக் காட்டியுள்ளோம். இப்போது நாம் வழங்கும் திருவாசகப்படிகளின் பதிகத்தலைப்பிற் காணும் தலைப்பெயர்கள் திருவாதவூரர் புராணத்துக்கு ஒத்திருக்கின்றன. ஆகையான், இவ்வரிசை கடவுண்மாமுனிவர் காலத்தோ, அல்லது அதற்கு முன்னர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் காலத்தின் பின்னரோ ஏற்பட்டிருக்கவேண்டும். இல்லாவிடின் முன்னதாகிய நம்பி திருவிளையாடல் மாறுபடுவதற்குக் காரணம் இல்லை. பரஞ்சோதி மாமுனிவர் திருவிளையாடற் புராணம் பத்தி நலம் செய்யுள்நயம் எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளதாயினும் "திருச்சாழல்" என்ற ஒரு பதிகத்தைத் தவிர வேறே ஒன்றைப் பற்றியும் கூறவில்லை.

ஆதலின், இப்போதுள்ளபடி பதிகத் தலங்கள் எவ்வளவு பொருந்தும் பொருந்தா என்று ஆராயற்பாலவே. கொஞ்ச காலமாக வழக்கத்தில்வந்தவைகளை ஆராய நம்மவர்க்கு மனமொவ்வாவிடினும், உண்மையை அறிய ஆராய்தல் தக்கதே. பூசைக்கு உரிய பிழையற்ற சுவடியோ, பிரதியோ வேண்டுமானால் தலப்பெயர்களற்ற பிரதியையே கைக்கொள்ளல் வேண்டும்.

(தொடரும்)

இராவ் சாகிப் சு. வி. கனகசபைப்பிள்ளை.

சிலப்பதிகார நாடகத்து ஒரு பகுதி.

முன்னுரை.

இஃது, இச்சங்கத்துப் பதினொன்காம் ஆண்டுவிழாவில், சங்க மாணவச்சிறுர்கள் நடித்துக் காட்டற்கு எழுதப்பெற் றது. சிலப்பதிகாரப் பேரழகில் பெரிதும் ஈடுபட்டு நிற்கும் சங்கத்தலைவரவர்கள் ஆணையின்படி, சிலப்பதிகாரம் முழுவதுமே அரங்கில் நடித்தற்குரிய நாடகமாக எழுத மிக்க அவாக் கொண்டுளேம். இச்சிறு பகுப்பினை எழுதுங்கால், அந்நூலின் அளப்பரிய பெருமைகள்-முன்னரும், இதனைக் கேட்டற்குரிய புலவர் குழாம்-வலப்பாலும் காண்ப்பெறினும், இதனை நடித்தற் குரிய சிறுவர் சிலர்-இடப்பாங்கில் நிற்றலையும் உணர்வேம், இடைநின்று இம்மட்டிற்றான் எழுத இயல்வேம் ஆயினேம். சிலப்பதிகாரத்துக் காணலாகாக் குடுகுடுப்பை, குறம் முதலிய சில இச்சிறுர்கள் உள்ளக்கிளர்ச்சியை நோக்கியே இணைக்கப் பெற்றனவாம்.

களம். க.

இடம்:– காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் உள்ளதோர் சோலை. **பொழுது:**–மாலை.

உரியோர்:– கோவலன், மாதவி, குடுகுடுப்பைக்காரன்.

கோவலன்:- கண்ணே! மாதவி! நமது காவிரிநங்கை கடலாடும் இவ்வழகிய காட்சியைக் காணுதார் கண்ணென்ன கண்ணே! காதலி! இப்பெரிய இந்திரவிழாவின் ஆரவாரத்தைக் கேளாதார் செவியென்ன செவியே! ஆ! என் காதலி…………

மாதவி:– காதல! என்னவோ கூறநினைந்து திடுமென நிறுத்தி விட்டீர்களே! ஆ என் காதலி என்றீர்கள்; அப் புறம் ஏதோ ஒரு பெயரைக் கூறநினைந்தீர்கள்; ஆயினும், அடியாள் புல்லிய காதில் அந்தச்சிரிய

பெயர் விழக்கூடாதென்று மறைத்துவிட்டீர்கள்.
(ஊடுதல்-அப்புறம் திரும்பிக்கொள்ளல்.)

கோ:- காதலி, என் ஆருயிர்ச் செல்வமே! இது என்ன ஊடல் ஓ, ஊடல் அன்று; உயிர்கோடல், உயிர்கோடலே; என்னே! ஆடவர்கள் நிலை எங்ஙனமும் இரங்குதற்கு உரியதொன்றே. தும்மினல், யாரோ ஒருத்தி நினைத்து விட்டாள்! விக்கினல்! யாரோ ஒருத்தி.................. பெருமூச்சுவிட்டாலும் யாரோ ஒருத்தி.................. கண்ணே! இங்கே பார்த்தருள். யான் கூறுவதைக் கேட்டருள்.

மா:- சொல்லுங்கள்........ (சற்றுத் திரும்பிப்பார்த்தல்)

கோ:- இக்காவிரி நங்கையால், நமது நாடும், நமது அரசனும் அடையுஞ் சிறப்பினை அளவிட்டுரைக்க முடியுமா! நம் வளவர் கோமான் இமயம்வரையில் தன் வெற்றி யை நாட்டினவன். கங்கை முதலிய பல நங்கையர் களை அடைந்தவன். எனினும், அவன்றன் உரிமைக் குலக்கொடியாய் விளங்கும் இக் காவிரிநங்கைக்கு ஊடல் என்பது ஒரு சிறிதாவது உண்டா! காதலி! வான் பொய்ப்பினும் தான் பொய்யாது, நமது வளவ னைப் போற்றுஞ் சிறப்பு நம் காவிரிக்கே உரியதன் ஹே? காதலி! இக் காவிரியின் பெருமையினைப் பாராட்டி ஒரு இனிய பாட்டுப்பாடி என் உள்ளத்தை மகிழ்விப்பாயாக.

மா:- காதல! நான் கூறியதற்குத் தங்களையன்றி வேறு சான் றும் வேண்டுமா? தங்கள் உள்ளத்தை மகிழ்விக்க வேண்டுமோ! தங்கள் உள்ளம் இனித்தான் மகிழ்ச்சி யடைய வேண்டும்! இப்போது ஏதோ ஒரு நினைவு பற்றிக் கவலையிலிருக்கின்றது! (மீண்டும் ஊடல்)

கோ:- காதலி! இல்லை. இல்லை. உன் மதிநுட்பம் மகிழ்ச்சி யைத் தருகின்றது. ஆயினும், நீ கூறுவதில் சிறிதும்

உண்மையில்லை. நான் முன்னரே கூறியபடி ஆடவர் கூறும் ஒவ்வொரு சொல்லும் ஊடலையே விளைவிப்ப தற்கு இச்செயலன்றி வேறு சான்றும் வேண்டுமோ! காதலி, இனியான் ஒன்றும் உரையாடேன். ஓ கோ! இதுகூட ஊடுதற்கு ஏதுவாகுமே! யாரையோ நினைத் துக்கொண்டு வாளாதிருப்பதாகுமே! ஓ, என் செய் வேன்!

மா:— காதல! அடியாள் கூறுவதிற் சிறிதும் உண்மையில்லை யாயின், தங்கள் உள்ளம் எக்கவலையும் அடையா திருப்பின், தாங்களே பாடியருள்வீர்களாக.

கோ:— காதலி! கட்டளைப்படியே பாடுகின்றேன்.

திங்கண்மாலை வெண்குடையான் சென்னி செங்கோ
லதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவேரி!
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல்
கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென்(று) அறிந்தேன் வாழி
காவேரி.

மா:— காதல! தாங்கள் பெண்டிர்க்குக் கூறும் கடமை மிக நன்றாயிருக்கின்றது. வளவன் பல நங்கையர்களைக் கூடினும், காவிரி புலத்தலுஞ் செய்தல் கூடாது. புலவாது ஒழிதல் வேண்டும். அவ்வண்ணம்தானே? காதல! மீண்டும் ஒரு முறை அப்பாட்டினைக் கூறுக.

கோ:— திங்கள்.... ... ...காவேரி!

மாதவி, உன் மதிநுட்பத்தை என்னென்பேன். யான் என்றும் அறிந்ததொன்றே! ஆனால், நீ கூறிய கருத் தை நான் நினைத்திலேனே. கண்ணே! நம் காவிரி நங்கையின் பெருமையினைவைத்து நீயும் ஒரு பாட்டு இனிது பாடுவாயாக.

மா:— மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை
பதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி
காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த தெல்லாம்
நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி
காவேரி!

கோ :- காதலி! என்ன அழகிய பாட்டு! இப்பாட்டில் உள்ள இரு பொருட் சிறப்பை என்னென்பேன்! வண்டுகள் ஒலிக்க-ஒரு பொருள், வளையல் ஒலிக்க-வேறு ஒரு பொருள்; நன்று! பூவாகிய ஆடை-ஒரு பொருள், பூத்தொழில் அமைந்த ஆடை-வேறு ஒரு பொருள்; நன்று! கயலாகிய கண்-ஒரு பொருள், கயல் போன்ற கண்-மற்றொரு பொருள்; நன்று! நன்று! கண்ணே! இன்னொரு முறை அருள்கூர்ந்து பாடுவாயாக.

மா :- மருங்கு... ... ...காவேரி.

கோ :- ஓ-ஓ! பின்னிரண்டடியை நான்முதலில் ஆராய்ந்துபார்க்க வில்லையே. காவேரி நங்கை வளங்குன்றாது வருவ தெல்லாம் நம்வளவன் செங்கோல் வளையாமை பற்றியேயாகும். மிகவும் பொருந்தும், பொருந்தும். ஆனால், மாதவி! இதில் ஒரு குறிப்புப்பொருள் வைத் துள்ளாய் போலும்! அரசன் கோல் வளையின் காவிரி வளனுங் குன்றும். ஆடவர் அன்பு குறையின் அவர் தம் காதலிகளின் அன்பும்............அவ்வண்ணந் தானே!

மா :- காதல! யான் கருதாதவெல்லாம் நீங்கள் கருதியுரைத் தால் யான் என் செய்வேன். என்னென்னவோ தொடுத்து விடுகின்றீர்களே! போகட்டும்: வேறு ஒரு பாட்டுக்கூறுங்கள்.

கோ :- திரைவிரி தருதுறையே! திருமணல் விரிவிடமே !
விரைவிரி நறுமலரே ! மிடைதரு பொழிலிடமே !
மருவிரி புரிகுழலே ! மதிபுரை திருமுகமே !
இருகயலிணைவிழியே ! யெனைவிடர் செய்தவையே!

மா:— (ஒருசிறை ஒதுங்கிநின்று - தனக்குள்) நன்று! நன்று! நம் காதலர் மனம் இன்று ஏன் இவ்வண்ணம் மாறுகின்றது ! பெரும்ஐயத்தை விளைக்கின்றதே. இல்லை, இல்லை; ஐயம் இல்லை; துணிவேதான். கடற்றுறைக்குச் சென்றாராம்; மணல் மேட்டில் இருந்தாராம்; ஒரு பொழிலிலிருந்து மணம் வந்ததாம்; அப்பொழிலுக்குச் சென்றாராம்; பின்னித் தொங்கிய கூந்தலாம், அது கன்னிப் பெண்ணெனக் காட்டிற்றும்; குளிர்ந்தமுகமாம்; இணங்கியவிழியாம்; ஆ! உண்மை வெளிப்பட்டது! இருக்கட்டும், எதற்கும் விரைதல் ஆகாது. இன்னொருமுறை பாடக் கேட்டுத் துணிவோம். (அருகில்வந்து) காதல! தாங்கள் பாடிய பாட்டுப் பருகப் பருகத் தெவிட்டாத தேன் அருவி போன்றுளது. இன்னொருமுறை பாடியருள்க.

கோ:- திரைவிரி... ... ...செய்தவையே !
காதலி நீ ஒன்று பாடியருள்.

மா:- (தனக்குள்) நாம் எண்ணியது திண்ணமே. காதலர் எங்ஙனம் மாறுபடினும் நம் நெஞ்சம் திரிவது என்றும் இல்லை. எனினும், நாமும் பொய்ம்மையாக வாவது ஒருவாறு மாறுபட உரைத்துப் பார்ப்போம்.

நேர்ந்தநங் காதலர் நேமிநெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே !
பூந்தண் பொழிலே! புணர்ந்தாடும் அன்னமே!
ஈர்ந்தண் துறையே ! இதுதகா தென்னீரே !

கோ :- (தனக்குள்) ஆ! இஃதென்னமாயம்! கனவோ ! நனவோ ! நம் காதலியின் பாட்டுத்தானே இது! நேர்ந்த காதலராம். அவர் தேராம். போய்விட்டதாம். வழிதெரிங்

திலதாம். பொழிலையும், அன்னத்தையும், நீர்த்துறையையும் தூதுவிடுதலாம். ஆ, தெய்வமே! என் ஆருயிர்ச் செல்வமாகிய கண்ணகியையும் பிரிந்திருக்கச் செய்ததோர் காதலின்முடிபு இதுதானே! நெஞ்சே! இனியாவது இப்பொய்க்காதலை அறிந்துகொள்வாயா? ஓ, இல்லை, இல்லை, நான் அறியாது மயங்கினேன். ஞாயிறும் திங்களும் திசைமாறினும் எம் காதல் மாறுமா! எங்ஙனம் ஆயினும், இன்னொருமுறை ஆராய்வாம். (மீண்டு) காதலி! நின்பாட்டுத் தெளிட்டாத தெள்ளமிழ்து. அவ்வமிழ்தினை இன்னொரு முறை யான் பருக அருளுதி.

மா:– நேர்ந்த.... ... ...தென்னிரே!
காதல! தாங்கள் இன்னும் ஒன்று. ஒன்றே ஒன்று அருளுதல் வேண்டும்.

கோ:– (தனக்குள்) நாம் எண்ணியது திண்ணமே. நம் காதல் ஒழிவதுபோல நாமும் ஒன்று பாடுவோம். (மீண்டு)

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்!
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்!

மாதவி! நேரமாகின்றது. இறுதியாக நீ ஒன்று கூறுவாயாக.

மா:- (தனக்குள்)உண்மைவெளிப்பட்டது, வெளிப்பட்டது. நாமும் பொய்ம்மையாகவாவது சிறிது அஞ்சுவிப்போம். (மீண்டு)

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்று ரொருவர்!
நீநல் கென்றே நின்று ரவர்நம்
மானேர் நோக்கம் மறப்பா ரல்லர்!

கோ:– (தனக்குள்) ஆ, ஊழ் வினையே! உன்செயலா இது!

குடுகுடுப்பைக்காரன்:-

ஓடிவாடா! குட்டிச்சாத்தான், நொண்டிச்சாத்தான், பாசண்டச்சாத்தான், ஓடிவாடா! ஓடிவாடா! மதுரைக்கறுப்பு, மாமுண்டிக்கறுப்பு, தூண்டிக்கறுப்பு, பாண்டிக்கறுப்பு, சடைக்கறுப்பு, சங்கிலிக்கறுப்பு, சப்பாணிக்கறுப்பு, சாராயக்கறுப்பு, ஓபின்கறுப்பு, உஸ்கிக்கறுப்பு, ஓடிவாடி! ஓடிவாடி! இரத்தக்காட்டேறி, உதிரக்காட்டேறி, இடுகாட்டுக்காட்டேறி, சுடுகாட்டுக்காட்டேறி, பிள்ளைவிழுங்கிக்காட்டேறி, பிணந்தின்னிக்காட்டேறி! ஓ, ஓடிவாடா! ஓடிவாடா! வெள்ளைமுனியா, கறுப்புமுனியா, வங்கத்துமுனியா, கங்கத்துமுனியா, கொங்கத்துமுனியா, எங்கள் சங்கத்துமுனியா, எங்கள் சங்கத்து வேப்பமரத்திலிருந்து ஓடிப்போன முனியா! ஓடிவாடா, ஓடிவாடா உற்றது சொல்லடா! உண்மையைச் சொல்லடா! மறைக்காமற் சொல்லடா! ஒளிக்காமற் சொல்லடா! ஓ, ஓ, கலகம் வருகுது! கலகம் வருகுது, கலக்கம் வருகுது, கலக்கம் வருகுது, கவலை வருகுது, கவலைவருகுது, அவலம் வருகுது, அவலம் வருகுது, கூட்டுப் பிரியுது, கூட்டுப் பிரியுது, கொடுமை நடக்குது, கொடுமை நடக்குது, கொலை விழுகுது, கொலை விழுகுது! ஒரு நகரம் எரிகுது, ஒரு பெரிய நகரம் எரிகுது

கோ:-(மீண்டு) நல்லது, மாதவி, நீ தோழியர்களுடன் இல்லம் ஏகுவாயாக; நான் சிறிது பின்னர் உன்பால் வந்து சேருவேன்.

மா:- காதல! அவ்வண்ணமே செய்வேன். (வணங்கி விடைபெறல்.)

குடுகுடுப்பைக்காரன்:— (அவையைப் பார்த்து) ஓ, ஓடிவாடி ஓ, ஓடிவாடி! உதிரக்காட்டேறி, இரத்தக் காட்டேறி, உண்மையைச்சொல்லடி! ஒளிக்காமற் சொல்லடி! மறைக்காமற்சொல்லடி! இந்தச்சங்கத்துக்கு அதிட்டம் வருகுது, அதிட்டம் வருகுது, அதிட்டம் வந்திட்டுது, அதிட்டம் வந்திட்டுது, இந்தச் சங்கத்துக்கு அதிட்டம் வந்திட்டுது, பணம் வருகுது, பணம் வருகுது, ஆயிரக்கணக்கா, இலட்சக்கணக்கா, பணம்வருகுது, பணம்வருகுது, இந்தச்சங்கத்தைச் சேர்ந்தவங்கள்—விழித்துக் கொண்டாங்

கள், விழித்துக்கொண்டாங்கள், இனிமேல், ஊர் ஊராய்ப்போவாங்கள், வீடு வீடாய்ப்போவாங்கள், எடுத்துச்சொல்லுவாங்கள், கொடுத்ததை வாங்குவாங்கள், காற்காசு வாங்குவாங்கள், அரைக்காசு வாங்குவாங்கள், ஒரு புடி நெல்லு-ஒரு பிடி அரிசி வாங்குவாங்க, எதைக்கொடுத்தாலும்-இன்பமா வாங்குவாங்கள். ஓ! அதிட்டம்வந்திட்டுது, இச்சங்கத்துக்கு அதிட்டம் வந்திட்டுது; காசு-பணம் ஆகுது. பணம்-பத்து ஆகுது. பத்து-நூறு ஆகுது. நூறு-ஆயிரம் ஆகுது. ஆயிரம்-லட்சம் ஆகுது. இந்த நாட்டிலே யிருக்கிற-பணக்காரரு, நிலக்காரரு, சொத்துக்காரரு, சுகக்காரரு, பெரிய வக்கில்மாரு, உத்தியோகத்தரு, பெரியபெரிய மடத்துக்காரரு இவர்களாலே ஒரு காசுமில்லே, ஒரு தூசுமில்லே. இவர்கள் பணம், தாசிக்காகுது, வேசிக்காகுது, மிரட்டுக்காகுது, திருட்டுக்காகுது, கொலைக்காகுது, கொள்ளைக்காகுது, கோட்டுக்காகுது-அந்தப்பாவச்சொத்து, அந்தப்பாவச்சொத்து, எப்படியாவது போகட்டும், இந்தச்சங்கத்துக்கு வேண்டாம். அதிலேயும் நல்லவங்க இருக்காங்க, அவங்க கொடுக்கிறாங்க, கொடுப்பாங்க, அவங்களை நான் சொல்லலெ, என்னைப்போல ஏழை கொடுப்பதுதான் ஏழுலட்சம் கோடி ஆகப்போகுது, இந்தப்பள்ளிக்கூடம், நல்வாழ்வு அடையுது, நல்வாழ்வு அடையுது, என்னைப்போல ஏழைப்பிள்ளை, எளியபிள்ளை, எத்தனையோ பேர், படிக்கப்போறாங்க, பிழைக்கப்போறாங்க, இது கல்லூரி ஆகுது, கலைமாடம் ஆகுது, திருவாழ்வு அடையுது, பெருவாழ்வு அடையுது, இந்தச்சங்கத்தைச்சார்ந்தவங்க, இந்தச்சங்கத்தலைவரு, இந்தக்கூட்டத்தாரு, கூட்டத்தலைவரு எல்லோருக்கும பெருவாழ்வு வருகுது, திருவாழ்வு வருகுது, நம்மதாயி, நம்மதமிழ்த்தாயி, அவள்-அருள் பெருகுது, அருள் பெருகுது, ஒரு ஆறுப்பெருகுது, ஒரு கடலாப் பெருகுது, நலம் வருகுது, நலம் வருகுது.

களம். உ.

இடம்:—கோவலன் இல்லம்.

பொழுது:—அந்திமாலை.

உரியோர்:—கண்ணகி, தேவந்தி (தோழி) குறத்தி, ஏவலர்.

தேவந்தி— அம்மா! கண்ணகி! தங்கள் காதலர் கோவலனார்-(அஅந்தோ! மாதவி செவிப்படின் 'யார் காதலர்' என்று வம்புக்குவரினும் வருவாள்) இன்று விழாநீர் ஆட மாதவியுடன் தேரேறிச் சென்றனராம். அவர் இவ்வளவு வன்கண்ணர் என்று நாம் அறியோமே! கோவலனார் கொடுமை ஒரு குன்றினும் பெரிது! மாதவியின் வஞ்சம் ஒரு மலையினும் பெரிது! பெரு வானினும் பெரிது!

கண்ணகி—தோழி! தேவந்தி! ஆ! தேவந்தி! என் ஆருயிர்ச்செல்வத்தினை, அமிழ்தினை—வன்கண்ணர் என்று சொல்லவும் வாய்வந்ததா? மனம் துணிந்ததா? தோழி! அவர் தம் இனிய சொல்லைக் கேளாது பல நாளாக வாடியிருக்கும் இத்தீவினைச்செவிகளில், இச்சொல், இடியேறுபோல் வீழ்ந்து வருத்துகின்றதே! இனி ஒருகாலும் அவ்வாறு சொல்லாதிருக்கப் பன்முறையும் வேண்டுகின்றேன்.

தே:— அம்மணி! பொறுத்தருள்க. மாதவியின்மேலுள்ள மனக்கசப்பு, அந்த வஞ்சகியின்பாலுள்ள மனக்கொதிப்பு, தங்கள்காதலரையும் இங்ஙனம் பழித்துரைக்கச் செய்தது. பொறுத்தருள்க.

கண்:— தேவந்தி! அம்மாதவியும் நீ கருதுகிற வண்ணம் வஞ்சகி அல்லள். மிக்க மனத்தூய்மையுடையவள். பொது மகளிர்க்குரிய பொருந்தா ஒழுக்கம் அவள்பாற் சிறிதுமில்லை. இந்தத் தீவினையேனிடத்தும் மிக்க அன்புடையவளாம். தனது அருமைச் செல்வமாகிய மணிமேகலையை இத்தீவினையேன் மகள் என்றே கூறுவளாம். அச்செல்வமும் என்னையே தன் அன்னையெனக் கூறுமாம். அம்மா! அம்மணிமேகலையின்பால் யான் வைத்திருக்கும் அன்பு, அவளைப் பெறும் பேற்றினை அடைந்த தாய் தந்தையர்களின் அன்புக்கு எத்துணையும் குறைந்ததன்று. அச்செல்வம் என்பால் வளர்ந்தாலும் என்காதலர் இங்கில்லாக்குறை எனக்குப் புலனாகாது.

தேவ:– அம்மா! தங்கள் உள்ளத்துயர்வு உலகினும் பெரிது! கற்பின் மாட்சி கடலினும் பெரிது. அம்மா! அவ்வளவு தூயமனத்தினளாகிய மாதவி ஏன் தங்கள்காதலரை விட்டுவிடலாகாது? இவர்தாம் ஏன் வந்துவிடலாகாது?

கண்:– தோழி! காதலரின் கருத்தினை யாம் எங்ஙனம் அறிதல் கூடும்? காதலர்புரியும் எதுவும் தக்கதென எண்ணுவதே நம் கடனாகும். ஆனால் ஒன்று கூறலாம். காதலரைப் பிரிந்தும் கலங்காநெஞ்சினேனைய் உயிர் சுமந்திருக்கும் இப்பேதையேனைப் போன்றவளா மாதவி. காதலர் பிரிவரேல் தன் உயிரையும் உடன் துணையாகப் போக்கும் உண்மையன்புடையாளன்றோ? எங்கள் வன்மை மென்மைகளை உணர்ந்துதான்போலும், நம் காதலர் என்னைப்பிரிந்தும் அவளைப் பிரிய இயலாமலும் இருப்பது. அம்மா! தேவந்தி! ஊழ்வினைச் செயலை உணராய் போலும்!

தேவ:– அம்மா! தங்கள் திருமுகம் என்றும் அடைந்துள்ள இயற்கை வாட்டத்தின்மேல், இன்று, மிக்கதோர் வாட்டமுற்றிருப்பதாகத் தெரிகின்றதே. ஏனோ? அடியேன் அறிதல் ஆமோ?

கண்:– தோழி! தேவந்தி! அஃதை என்னென்று கூறுவேன்.

“ கடுக்குமென் னெஞ்சம் கனவினால், என்கை
பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுட் பட்டேம்.
பட்ட பதியில், படாததொரு வார்த்தை,
இட்டனர் ஊரார், இடுதேளிட் டென்றன்மேல்,
கோவலற்கு உற்றதோர் தீங்கென்று. அதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன். காவலனோடு,
ஊர்க்குற்ற தீங்கும் ஒன்றுண்டால், உரையாடேன்.
தீக்குற்றம் போலும், செறிதொடீஇ!”

தேவ:– அம்மா! நீங்கள் சொல்வது நன்கு விளங்கவில்லையே. தெளிவாகச் சொல்லியருள்க.

கண்:– தோழி! நேற்றிரவு ஒரு தீயகனுக்கண்டேன். அதனை யெடுத்துரைக்கவும் என் நெஞ்சம் கலங்குகின்றதே! அம்மே! என்கொழுநர் என்னைக் கைப்பற்றினராய்ப் போக, நாங்கள் ஒரு பெரிய நகரினைச் சேர்ந்தோம். அப்பதியில் எங்களுக்கு ஏலாததொரு பொய்யுரையைப்-பொய்த்தேளைப் போடுவார் போல-என் காதலர் மேற் சுமத்தினர். அதுபற்றி என் ஆருயிர்க் காதலர்க்கு ஒரு தீங்கு உற்றதெனப் பிறர்சொல்லக் கேட்டேன். அது பொழுது அவ்வூர் அரசன் முன்னர்ச் செல்லத்தகாதேன் சென்று, வழக்குரையாதேன் வழக்குரைத்தேன். பின்னர் அவ்வரசனொடு அவ்வூர்க்குத் திருவருளால் உற்றதொரு தீங்குண்டு. அம்மா! "உரையார் இழித்தக்க காணிற் கனா" என்னும் பழமொழியினை அறிவாயே! ஆகையால், இன்னும் விரித்துரைக்க இயன்றிலேன். தேவந்தி! நான் என்ன செய்வேன்! (துயர்ந்து தேவந்தியின் தோளிற் சார்தல்)

தேவ:– அம்மா! நீங்கள் கண்டகனுக்கொண்டு வருந்தல் வேண்டா. நீங்கள் உங்கள் காதலரால் புறக்கணிக்கப்பட்டீரல்லீர். உங்கள் கணவன்பொருட்டு ஒரு நோன்பு முற்பிறப்பிலே செய்யத்தக்கது செய்யாது விட்டீர்கள். அதனல் வருவன இத்தீங்குகள். இவைதீரவேண்டின் நமது காவிரி கடலோடுகலக்குமிடத்திலுள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் தூய குளங்களில் மூழ்கிக், காமவேள்கோட்டம் சென்று அவனை வழிபடல்வேண்டும். அவ்வாறுசெய்யின் இனி உங்கள் கணவர் உங்களைப் பிரியார். இம்மையில் எல்லா இன்பமும் பெற்று, மறுமையிலும் போக பூமியிலே பிறந்து, கணவனொடு பிரியாது, மூன்றுபல்லங்காலம் இன்பமுறுவீர். ஆதலின், நாம்நாளையே சென்று நீராடிக் காமவேளை வழிபடுவோம். பொற்றொடீஇ!

"கைத்தாயு மல்லை கணவற்கு; ஒருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெடுக உய்த்துக்
கடலோடு காவிரி சென்றலைக்கு முன்றில்

மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டம் சூரிய குண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவர். உலகத்துத் தையலார்
போகஞ் செய்பூமியினும் போய்ப்பிறப்பர். யாம் ஒருநாள்
ஆடுதும். அம்மா! யாம் ஒருநாள் ஆடுதுமா?

கண்– தேவந்தி! நன்கு கூறினை! அங்ஙனங் கணவரையின்றித் துறைமூழ்கித் தெய்வந்தொழுதல் கற்புடைமகளிர்க்கு இயல்பன்றே! அம்மா!

"சாமெனிற்சாதல் நோதல் தன்னவன் றணந்த காலை
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பாள்?

இவையன்றோ நம் தமிழ்நாட்டுக் கற்புடைமகளிர் இயல்பு. என்னே? இவை அறியாய்போற் கூறினை!

குறத்தி:– (திரைமறைவில்)

கூடைமுறங்கட்டலையா, அம்மே! கூடை!
பச்சைகுத்தலையா, அம்மே! பச்சை!

தேவ:– அம்மா! கண்ணகி! குறத்தியின் குரல் ஒன்று கேட்கிறது. நமது நகரில் நாலைந்து நாளாக ஒரு குறத்தி-பாண்டிய நாட்டுக் குறத்தியாம், அவள்-நன்றாகக் குறிசொல்லுகின்றாளாம். இங்கே கூவிக்கொண்டு வருபவள் அவள்தான் போலும்-அவளை இங்கே அழைத்துவரலாமா?

கண்:– தேவந்தி-என்னநீயும் அறிவில்லாதவள்போற் பேசுகின்றாயே! குறியாவது, கோணங்கியாவது. என்னவோ-எனக்கு அவைகளிலெல்லாம் மனப்பிடித்தமில்லை. வேண்டுமானால் உன் விருப்பப்படி பொழுது போக்கிக் கொள்.

குற:–குறிகள் கேட்கலையா! அம்மே குறி.

தே:– ஏ; குறத்தி! இங்கே வா.

குற:– அம்மா! இதோ வந்துவிட்டேன்.

தே:– எடி! நீயார்? எந்த ஊர்? என்ன பேர்?

குற:– அம்மா! நான் தெற்கே வெகுதூரம், தென்பாண்டி நாடு. பொதியமலைக் குறத்தி. கூடை முறங் கட்டுவேன். குறிகள் சொல்லுவேன். ஒண்டாத பெண்களும் பின் ஓடிவரும் மைதருவேன். அண்டாத ஆண்களையும் ஆட்டிவைக்கும் மை தருவேன். என் பாட்டி எயினி என்றால் உங்களுக்குத் தெரியுமே. அவள் பேர்த்தி குறி எயினி நான்.

* மந்தமா ருதம், வளரும் மலையெங்கள் மலையே!
வடகலைதென் கலைபயிலும் மலையெங்கள் மலையே!
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே!
கனகம்வ மணிவிளையும் மலையெங்கள் மலையே!
இந்தமா நிலம்புரக்கும் செந்தமிழ்த்தாய்! அம்மே!
இன்பமுறும் தென்பொதிய மலையெங்கள் மலையே!

தேவ:– என் அம்மா! பொதிய மலையின் பேரைக்கேட்டிருக்கின்றோம். நேரில் பார்த்ததில்லை. அம்மா! இவள் பாடியதில் வடகலை தென்கலை பயிலும் மலையென்றாளே! வடமொழியும் தமிழும் அங்கே படிப்பார்களோ?

கண்:– அப்படியன்று, அம்மா! வடமொழியும்-நமது இனிய செந்தமிழை விரும்பிக்கற்கும் மலை என்று பொருளாகும் போலும்.

---

* இப்பாடலும், பின் வரும் பாடல்களும் **குமரகுருபர அடிகள்** அருளிய **குறத்திலுள்ள** இனிய பாடல்களை அல்லது பாடல் அடிகளைப் போன்னே போற் போற்றி எடுத்துக்கொண்டவை.

தேவ:- ஏ, குறத்தி! உங்கள் மலையின் பெருமை கேட்கக் கேட்க இனிமையாக இருக்கின்றது. இதன் பெரு வளங்களை யெல்லாம் கூறுவாயாக. அது பெரிய காடடர்ந்த மலையாயிற்றே. சிங்கம், புலி, கரடிக ளெல்லாம் இருக்குமே. அங்கே, நீங்களெல்லாம் எப்படிக் குடியிருப்பீர்கள்?

குற:- அம்மா! அது பெரிய முனிவர்கள் இருக்கும் இடம். சிங்கம், புலிகள் எல்லாம் எவர்க்கும் ஒரு தீங்கும் செய்யா. அம்மா!

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்!
சினப்புலியும் மடப்பிணையும் தினைத்திடும் அங்
கொருபால்!
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்!
விட அரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்!
அங்கணமர் நிலங்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அரியதமிழ்ச் செல்வி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை அம்மே!

தேவ:- உங்கள் மலையின் பெருமை மனத்தில் பெருவியப்பை உண்டாக்கி விட்டது. எயினி! உங்கள் உணவு, செயல் முதலியவற்றைக் கூறுவாயாக!

குற:- கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி எடுப்
போம்!
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத்
தொடுப்போம்!
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய்
மடுப்போம்!
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்!
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக்
கொடுப்போம்!

சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண்
படுப்போம்!
எழுந்து தமிழ்த் தாய்காலில் விழுந்துவினை
கெடுப்போம்!
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே!

தேவ:- எயினி! குறிபார்க்கத் தெரியும் என்று சொன்னாயே. நீ தக்கவர்கள் யாருக்காவது குறி சொல்லியதுண்டா? குறி எப்படிச்சொல்லுவாய்? கைக்குறி பார்ப்பாயா? முகக்குறி பார்ப்பாயா? முறக்குறி பார்ப்பாயா?

குற:- அம்மா! எல்லாக் குறியும் பார்ப்பேன்.

முன்னொருநாள் தமிழன்னை முகக்குறிபார்த் தவட்கு
முத்தமிழ்தேர் புலவர்களைப் பெறுவையென்று
மொழிந்தேன்!
பின்னொருநாள் உமைபாகன் பேரினைக்கொள்
பெரியான்
பிறந்துநினைக் கரந்தையிலே புரந்திடுமென்
றுரைத்தேன்!
இன்னுமவன் துணையாக இசைந்துபணி புரிவோர்
இருமொழிதேர் கதிரேசன் முதற்பலரென்
றுரைத்தேன்!
சொன்னகுறி எல்லாமென் சொற்படியே பலிக்கும்!
தொகுத்துநீ நினைத்தகுறி இனிச்சொலக்கேள்
அம்மே!

தேவ:- நல்லது எயினி! எங்கள் தலைவியின் முகத்தைப் பார்த்துக் குறி சொல்லு பார்ப்போம்.

குற:- அம்மா! இந்தக்குறத்திக்கு ஒரு பிடிசோறும், ஒரு சிறு துணியும் கொடுங்கள். இந்தத் தலைக்குக் கொஞ்சம் எண்ணெய் வாருங்கள்.

நன்றெல்லாம் உடையதிரு நாச்சியரே இந்த
நாயினுக்குப் பிடிசோறும் சிறுதுணியும் நல்காய்!

உன்றன்பேர் வாழ்வாக உறுகணவன் அம்மே!
உனைப்பிரிந்தே ஒருசிறுக்கி வலையில்அகப் பட்டான்!
குன்றினில்வாழ் இக்குறத்தி கொடுக்குமையின்
திறம்பார்!
குறித்துமுகம் தனிலிடுவாய் கொண்டகுறை தீரும்!
இன்றிந்தப் பொழுதில்அவன் இங்குவரக் காண்பாய்!
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிபார் அம்மே!

தேவ:— அம்மா! இக்குறத்தி சொல்லும் நற்குறியைப் பார்த்தீர்களா? தங்கள் காதலர் இப்போது வரப்போகிறாராமே!

கண்:— தோழி! முன்னமேயே என்னை இந்த விளையாட்டுக்கெல்லாம் ஆளாக்காதிருக்க வேண்டினேனே!

ஏவலர்:— அம்மா! நம் தலைவர், தலைவர்!

தேவ:— ஓ அம்மா! தங்கள் காதலர் இதோ நம் கடைத்தலை வந்துளார். எழுக. எதிர்சென்று வணங்கி வரவேற்பீராக.

கண்:— (வணங்கி வரவேற்றல்)

(வாழ்த்து)

வாழிபல ஊழிதொறும் வாழிதமிழ் அன்னாய்!
மைந்தரொடுந் தொண்டரொடும் வாழிதமிழ் அன்னாய்!
வாழிதிரு வார்கரந்தை மேவுதமிழ்ச் சங்கம்!
வாழிபல ஊர்களினும் தாவுமிதன் அங்கம்!
வாழிபருள் ஓர்உருவாய் வாழுமாம கேசன்!
வாழிகலை சேர்மதியம்! மாசில்கதி ரேசன்!
வாழிதிரு நாளிதனிற் கூடியபல் லோரே!
வாழிதமிழ்த் தாயருளை நாடியநல் லோரே!

இதழாசிரியர்.

(210-ம் பக்கத் தொடர்ச்சி)
மேற்படி பொன்றின் நிறை ஐம்பத்திருபலம்.................பதின் முப்பலம் மேற்படி யொன்றின் நிறை ஐம்பலம் மேற்படி பொன்றின் நிறை பதினைம்பலம் **வெண்கல இலைத்தட்டு** ஒன்று நிறை முப்பலம் **கரகழகிழ்** ஒன்று நிறை ஐம்பலம் தளிகை ஒன்று நிறை ஐம்பத்துநாற்பலம் **சட்டுவம்** ஒன்றினிறை பதின் முப்பலம் **தூபமணி** பொன்றின் நிறை இருபத்திருபலம் **எறிமணி** பொன்றி னிறை நூற்றெழுபத்தறுபலம் மேற்படி யொன்றின் நிறை நாற்பத்துமுப்பலம் **தூவமணி** பொன்றின் நிறை இருபலவரை **சேகண்டிகை** ஒன்றின் நிறை நூற்றிருபதின் பலம் மேற்படி பொன்றி னிறை நூற்றைம்பலம் **கைமணி** பொன்றி னிறை ஐம்பத்தெண்பலம்.

பிழை, திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
208	30	மாணவட்டில்	மானவட்டில்
209	17	பளித்தாளம்	பளிக்தாலம்
,,	25 } 26 }	பொன்று பீட மொன்றுள்பட	பொன்று உடுக்கை வாசிக்கிற பாவையொன்று பாடுகிற பாவையொன்று பீட மொன்றுள்பட
210	18	அரைதலை	அனந்தலை
,,	21	கொன்று ஒன்றுநிறை	கொன்று நிறை
220	20	சிவகணைப்	சிவகனைப்
223	29	நெஞ்கிற்	நெஞ்சிற்
224	26	மாநாய்	மாநாய்
,,	29	முகந்திரும்பி	முகந்திருப்பி
226	6	பொதுவாகவே	சாமானியமாகவே
225	26	கர்ப்பக்கிருகம்	கருப்பக்கிருகம்
227	27	,,	,,
229	10	தலைப்	தலப்
241	17	தீர்ப்பாள் ?	தீர்ப்பார்.
172	13	(திருவன்)	(திருவள்)
,,	21	சாத்தன் எனவும் சில	சாத்தன் (சிலப்) எனவும்
173	33	இவருக்குச்	இவரைச்
இறுதிப் புற ஏடு.	19.	நாட்டர்	நாட்டார்

(ஏனைய பின்னர் எழுதப்பெறும்.) (இ. ர்.)